
# புதிய வேலிகள்

- நாடக எழுத்துருவும் நிகழ்த்துகைப் பதிவுகளும் -



பிரதேச செயலகம்

சண்டிலிப்பாய்

# "புதிய வேலிகள்"

- நாடக எழுத்துருவும் நிகழ்த்துகைப் பதிவுகளும் -

பிரதேச செயலகம்

சண்டிலிப்பாய்

2012

| | | |
|---|---|---|
| **நூல்** | : | "புதிய வேலிகள்" |
| **விடயம்** | : | நாடகம் |
| **ஆசிரியர்** | : | யாழினி யோகேஸ்வரன் |
| **முதற்பதிப்பு** | : | கார்த்திகை 2012 |
| **அளவு** | : | A5 |
| **பக்கங்கள்** | : | 71 |
| **வெளியீடு** | : | பிரதேச செயலகம்<br>சண்டிலிப்பாய்<br>2012 |
| **அச்சகம்** | : | வானவில் பிறிண்டேர்ஸ்,<br>மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. |

# முன்னுரை

**"திறந்த வெளிகள் தேடும் புதிய வேலிகள்"**

நாடகம் என்பது ஒரு ஆற்றுகைக் கலைவடிவம். ஆற்றுகையாளர் மனங்களில் மகிழ்வையும் திருப்தியையும் வழங்கிடும் அதேநிலையில், ஆற்றுகையை உள்வாங்கும் பார்ப்போர் உள்ளங்களிலும் அவ்விதமான தாக்கங்களை உண்டு பண்ணுகின்ற ஆற்றல்மிக்க கலையாக்கச் செயற்பாடு. இதுவே நாடகத்தின் உயிர்ப்புமிகு இயங்கு நிலையின் அடிப்படையாகவும் அமைகின்றது.

இவ் ஆற்றலின் அடிப்படையில், அழகியலுடன் கூடிய முருகியல் நிலையில் சமூக ஊடாட்டங்களை நிகழ்த்துவதற்கான களமாகவும் வளமாகவும் அமையும் சிறப்புமிக்கதாலேயே நாடகச் செயற்பாடுகளில் பலரும் பல நிலைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இங்கு, காத்திரமான சமூக முன்னெடுப்புக்களுக்கான படைப்பாக்கக் கருவியாக நாடகத்தைக் கைக்கொள்ள விரும்பும் செயற்பாட்டாளர்கள் பொதுவாக, நவீன தொழில்முறை நாடகவாக்க முறைமைகள் முன்வைக்கும் கலாபூர்வமான நியதிகளையும் தாண்டி அடிப்படையான சில விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியவர்களாக உள்ளமை முக்கிய விடயமாகின்றது.

குறிப்பாக, தாம் மேற்கொள்ள முனைந்துள்ள நாடகச் செயற்பாட்டின் நடைமுறைத் தேவை, அதன் இயக்கம் குறித்த கருத்தியல் மற்றும் செயல் நிலையிலான தெளிவான விளக்கங்களை அறிந்திருக்கக் கூடியவர்களாகவும் அதற்கான பயிற்சிகளில்

ஆத்மார்த்தமாக ஈடுபடக்கூடியவர்களாகவும் இருப்பது மிக அவசியமாகின்றது.

இப்பின்னணியில், யாழ். சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பிலும், UNDP அனுசரணையிலும், குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட பட்டதாரிப் பயிலுனர்கள் சிலரது பங்குபற்றல்களிலும் உருவாக்கம் பெற்றுள்ள 'புதிய வேலிகள்' நாடகவாக்கச் செயற்பாட்டுப் பகிர்வுகள் மற்றும் நாடக எழுத்துரு என்பன நூலுருப் பெறுகின்றமை முக்கியமானதாகின்றது.

பிரதேச செயலகத்து சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் அவர்களது இணைப்பாக்கத்தில் இடம்பெற்ற 'இன்றைய சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்' எனும் கருப்பொருளிலான கருத்தரங்கில், இத்தகைய சவால்கள் குறித்த அவதானிப்பையும் அக்கறையையும் சமூகமயப்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டபோது பட்டதாரிப் பயிலுனர்களில் சிலர் முன்வைத்த நாடகத்தினை ஊடகமாகக் கொள்ளும் திட்டம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதுவே 'புதிய வேலிகள்' நாடகவாக்கச் செயற்பாட்டின் ஆரம்ப ஊற்றாகவும் உத்வேகத்தை கொடுத்த சந்தர்ப்பமாகவும் அமைந்தது.

இவ்வகையில் குறித்த விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக இடம்பெற்ற களப்பயிற்சி நிலையிலான கலந்துரையாடல்கள் மற்றும் ஏனைய பயிற்சிகள் தத்தம் சமூகத்தின் நடைமுறையிலுள்ள சாட்சியமிகு

சம்பவங்களை நாடகத்திற்கான காட்சிகளாகக் கண்டறிய உதவியதோடு அக்காட்சிகளின் பொருத்தமான கோர்ப்பில் உருவான கதைப்போக்கு பயிலுனர்களால் ஆக்கப்பட்ட பாடல்கள், கவிதைகள், உரைகள் போன்றவற்றின் செருகல்களுடன் நாடகத்திற்கான ஒரு தளத்தினை வடிவமைத்துக் கொடுத்தது.

ஏற்கனவே எழுதி முடிக்கப்பட்டதான, நாடகாசிரியர் ஒருவரது நாடக எழுத்துருவை தெரிவு செய்து அல்லது நாடக நெறியாளர் தாமே ஒரு பிரதியினைத் தயார் செய்து அதனையோ அதனடிப்படையிலோ நிகழ்த்துகையை வடிவமைப்புச் செய்யும் பொதுவான நாடகவாக்க முறைமைக்கு மாற்றாக இங்கு நாடக எழுத்துருவும் நாடக நிகழ்த்துகையும் ஒரே நிலையில் முகிழ்ப்புப் பெற்றிருப்பது முக்கிய விடயமாகின்றது.

இதேபோன்று பயிலுனர்களின் பங்களிப்பில் ஒரு வடிவம் பெற்ற பிரதியும் அளிக்கை வடிவமும் நாடக வளவாளராகச் செயற்பட்ட திரு. க.சீலன் அவர்களின் வழிப்படுத்தலில் மேலும் செழுமை பெற்றது. இங்கு ஆற்றுகையாளர்களோடு ஒருவராக இருந்து ஆற்றுகை வேண்டி நிற்கும் முறைமைக்கும், போக்கிற்கும் ஏற்ப இயங்கும் தளர்ச்சியும் பயிற்சியும் மிக்க தகைமையாளராக நாடக வளவாளர் செயல்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது.

இங்கு உருவாக்கம் பெற்றுள்ள எழுத்துப்பிரதி மற்றும் ஆற்றுகைவடிவம் என்பன தத்தம் நிலையில் முழுமை பெற்றிருப்பினும்கூட தொடர்ச்சியாக வேறுபட்ட இடங்களில் (Space) இடம்பெறும் ஆற்றுகைகளின் இயக்கத்திற்கும் ஆற்றுகையின் பிரதான இலக்கினராகவும் ஒரு நிலையில் ஆற்றுகையாளர்களாகவும் செயற்படும் சமூகத்தினரின் பிரதிபலிப்புகளுக்கும் ஏற்ப வளமான மாற்றங்களை உள்வாங்கி மேலும் மேலும் முழுமைபெறும் தன்மை கொண்டிருப்பதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று, இத்தகைய பயிற்சி முறைமைகளே நவீன தொழில்முறை நாடகவாக்க முறைமைகள் மற்றும் முறைமையாளரர்களிடமிருந்து மாறுபட்டதான, சமூக மாற்றத்துக்கான கருவியாக நாடகத்தை கையாளும் அரங்கச் செயற்பாட்டாளர்களின் தனித்துவ அடையாளங்களாகவும் அடிப்படை கடைப்பிடிப்புக்களாகவும் அமைகின்றன எனலாம்.

இந்நிலையில் இவ் நாடகச் செயற்பாட்டுப் பகிர்வுகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஆர்வம் கொண்டுள்ள பலருக்கும் பயன்படத்தக்க ஆவணமாகத் திகழும் என்ற நம்பிக்கையிலேயே இங்கு நூலுருப் பெறுகின்றது.

நாடக செயற்பாட்டினூடாக முகிழ்ப்புப் பெற்ற நாடக எழுத்துருவுடன் ஆற்றுகை தொடர்பான சில விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இச்செயற்பாட்டில்

ஏதோ ஒரு நிலையில் தம்மை இணைத்துக் கொண்டதோடு செயற்பாடு தொடர்பாக தமது மனப்பதிவுகளை ஆர்வமுடன் வழங்கியதன் அடிப்படையில் நாடக ஆர்வலர்களது சிலரது குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. கருத்துக்களிலும் அதனை வெளிப்படுத்தும் முறைமைகளிலும் எந்தவித விரிசலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது காரணமாக அனுபவ பகிர்வுகளை வழங்கியவர்கள் நடையிலேயே அவர்களது பகிர்வுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது கவனிப்பிற்குரியது.

இத்தகைய முயற்சிகளுக்கு எப்போதும் ஆதரவும் வழிகாட்டலும் நல்கும் திரு.சுந்தரம் அருமைநாயகம், (யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.) மற்றும் திரு.சு.முரளிதரன், (பிரதேச செயலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.) ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் வழங்கி நூலைச் சிறப்பித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. அத்துடன் இவ் நல் முயற்சிக்கு அனுசரணை வழங்கி எம்மைப் பலப்படுத்தியுள்ள UNDP நிறுவனத்தினருக்கும், நவாலியூர் அன்பர் திரு.T.சிறீதரன் அவர்களுக்கும், நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் (திருமதி.பி.சத்தியவதனி, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்), நாடகவாக்க வளவாளர் திரு.க.சீலன், (கலை இலக்கியப் பேரவை) கலாசார உத்தியோகத்தர் அனைவருக்கும் நிகழ்த்துனர்களான பட்டதாரிப் பயிலுனர்கள் சார்பாக நன்றியினைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

மற்றும், இத்தகைய நாடகவாக்க முயற்சிகளுக்கு மேலும் ஊக்கமளிக்கும் விதமாக எமது 'புதியவேலிகள்' நாடகத்தை நிகழ்த்துவதற்கான வாய்ப்புக்களை தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கின்ற பாடசாலை அதிபர்கள், கிராமத்தவர்கள் மற்றும் நிகழ்வு பற்றிய செய்திகளை ஆக்கபூர்வமாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஊடகத்தினர், நிகழ்வு பற்றிய தமது அனுபவப் பகிர்வுகளை வழங்கி நூலைச் சிறப்பித்துள்ள நாடக ஆர்வலர்கள் அனைவருக்கும் எம் மனப்பூர்வமான நன்றிகள்.

மேலும் இந்நூலாக்கத்தில் தட்டச்சு, மொழி நடைத் திருத்தம் என பல நிலைகளிலும் உறுதுணையாயிருந்த நண்பர்கள் தபோதினி, தாரணி, பபிதா, நிஜந்தினி, கல்யாணி, மற்றும் எனது நாடகத்துறை சார்ந்த நண்பர்கள் (பட்டதாரி பயிலுனர்கள்) அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இந்நூலை சிறப்புற அச்சிடும் வானவில் பிறிண்டேர்ஸ் அச்சகத்தினருக்கும் நன்றியினைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

**யாழினி யோகேஸ்வரன்**

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் புதிதாக இணைக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களால் சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நாடகம் அண்மைக் காலங்களில் பல இடங்களிலும் அரங்கேற்றப்பட்டுவருகின்றமை யாவரும் அறிந்ததே. இந்நாடகம் சிறுவர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள் எவ்வடிவங்களில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனையும் அவற்றை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதனையும் மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

இவ்விழிப்புணர்வு நாடகமானது சிறுவர்கள், பெற்றோர்கள், சமூகஆர்வலர்கள், மற்றும் சிறுவர் தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபடுவோர் ஆகியோரது பொறுப்புக்களை வலியுறுத்துவதுடன் தற்காலத்தில் சிறுவர்கள் எவ்வாறு துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக தற்கால உலகில் சிறுவர்கள் மீது உறவினர்களால் மேற்கொள்ளப்படும் துஸ்பிரயோகம், சிறுவர்கள் தனிமையில் இருக்கும்போது எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் சிறுவர் ஊழியம், பெரியோரது கருத்துக்களை சிறுவர்கள் மதிக்காமை, போதைப் பொருள் பாவனை, மதுப்பாவனை மற்றும் தவறான கையடக்கத் தொலைபேசிப் பாவனை என்பவற்றால் சிறுவர்கள் எவ்வாறு துஸ்பிரயோகத்திற்கு

உள்ளாகுகின்றனர் என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இவ்விழிப்புணர்வு நாடகமானது இதுவரை வலிதென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 30 பாடசாலைகளில் அரங்கேற்றப்பட்டதுடன் இப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறும் பிரதேசங்கள் என அடையாளம் காணப்பட்ட பல கிராமங்களிலும் அரங்கேற்றப்பட்டமை சிறப்பம்சமாகும் அத்துடன் இவ்விழிப்புணர்வு நாடகமானது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு அப்பாலும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வகையில் தாமாகவே முன்வந்து இந்நாடகத்தினை அரங்கேற்றுவதற்காக செயற்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களையும் இதனை ஒருங்கிணைத்து வழிப்படுத்திய சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்வதுடன் பலரதும் பாராட்டினைப் பெற்ற இவ்விழிப்புணர்வு நாடகம் தொடர்பான மலர் ஒன்று வெளியிடப்படும் இவ்வேளையில் இம்மலர் வெளியீட்டிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

**சு. முரளிதரன்**
**பிரதேச செயலர்,**
**பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய்.**

## நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரின்

## வாழ்த்துச் செய்தி

**எம் சிறார்களின் எதிர்கால நலனை நோக்கி......**

எம் சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு துஸ்பிரயோகங்களில் இருந்து முற்பாதுகாப்பு பெறும் நோக்குடன் "புதிய வேலிகள்" என்னும் விழிப்புணர்வு நாடகம் நெறியாள்கை செய்யப்பட்டு, இன்று பாடசாலை மட்டங்களிலும், கிராம மட்டங்களிலும் மேடையேற்றப்பட்டுக்கொண்டு வருகின்றது.

இவ் விழிப்புணர்வு நாடகத்தின் மூலம் தற்போது எமது சமூகத்தில் அதிகமாக இடம்பெற்று வரும் சிறுவர்கள் தொடர்பான பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர்களின் தொலைபேசிப் பாவனையும் அதனால் அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும், சிறுவர்கள் மதுபாவனைக்கு உட்படுத்தப்படும் விதமும், அதனால் ஏற்படும் சமூகச் சீரழிவுகள் போன்ற முக்கியமான மூன்று எண்ணக்கருக்களை மையமாகக் கொண்டு இந் நாடகம் ஆக்கப்பட்டுள்ளது. இந் நாடகம் மூலம் எமது சிறார்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதன் மூலம் எமது எதிர்காலச் சிறுவர்களை துஸ்பிரயோகங்களில் இருந்து பாதுகாக்க முடியும் என நம்பிக்கை கொள்கின்றேன்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு என இவ்வருட நடுப்பகுதியில் புதிதாக இணைக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களுக்கான பயிற்சி வகுப்பின் போது சிறுவர்களின் உரிமைகள் எவை என்பது தொடர்பாகவும், தற்காலத்தில் அவை மீறப்பட்டு எமது சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பாகவும் எம்மிடம் வந்த சேவைநாடிகள் தொடர்பான உண்மைச் சம்பவங்களை அவர்களுடன் நான் கலந்துரையாடிய போது இளம் துடிப்புடைய எமது புதிய உத்தியோகத்தர்களில் சிலர் தாமாகவே முன்வந்து எமது தேசத்தில் உள்ள சிறுவர்களை உடனடியாகவே துஸ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பினைப் பெற்றுக் கொடுத்து சிறந்த ஒரு நற்பிரஜைகளாக உருவாக்க தாம் முழுமையான பங்களிப்பை வழங்குவதாக உறுதிமொழியளித்ததன் பயனாக புத்துருவாக்கம் பெற்றதே இந்த "புதிய வேலிகள்" என்னும் விழிப்புணர்வு நாடகம் ஆகும்.

ஒவ்வொருவரும் "தாம் உண்டு தமது வேலை உண்டு" என்று சுயநலத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் இந்த நவீன உலகத்தில் எமது பிரதேச சிறுவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பொதுநல நோக்குடன் இப் பட்டதாரிப் பயிலுனர்கள் எடுத்த இம் முயற்சியை நான் .மிகவும் பாராட்டுகின்றேன்.

இன்று அரசாங்க அதிபர் முதல் உயரதிகாரிகள் பலராலும் காலத்தின் முக்கிய தேவை கருதி எம்

எல்லோராலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்பாக பாராட்டுக்கள் பலவற்றைப் பெற்றுள்ளோம். இவ் விழிப்புணர்வு நாடகச் செயற்பாட்டிற்கு பலவழிகளிலும் எமக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் மேற் கொண்டு எமக்கு உதவி புரிந்த எமது பிரதேச செயலர் மதிப்பிற்குரிய திரு.சு.முரளிதரன் அவர்களுக்கு முதலில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இவ் விழிப்புணர்வு நாடக வெற்றிக்கு பக்கபலமாக இருந்த பிரதேச செயலக கணக்காளர் அவர்களுக்கும், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இவ் விழிப்புணர்வு நாடகத்தினை சிறந்ததொரு நெறியாள்கைக்கு ஊடாக புத்துயிர் அளித்து, இந் நாடகத்தினை சிறந்த முறையில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர் க.சீலன் (கலை இலக்கியப் பேரவை) அவர்களுக்கும் இவ்வேளையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவரின் சிறந்த சேவையை நாம் தொடர்ந்தும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

அடுத்ததாக இந்நாடகத்தின் உயிர்நாடிகளாக விளங்கும் புதிய பட்டதாரி உத்தியோகத்தர்கள் அனைவரும் தமது சிறப்பான நடிப்பின் மூலம் நாடகத் துறையில் தமக்கு சளைத்தவர்கள் யாரும் இல்லை என்பதை நிரூபித்து வருகின்றனர். இவர்கள்

அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுவதுடன், அவர்கள் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் சிறப்பாக தமது பணிகளை ஆற்றுவதன் மூலம் பல சிறப்புக்களையும், பதவி உயர்வுகளையும் பெற எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆரம்பத்தில் பல பெண் பட்டதாரிப் பயிலுனர்கள் இவ் விழிப்புணர்வு நாடகத்தின் முயற்சியில் பங்கெடுத்துக்கொண்ட போதிலும் இறுதி நொடியில் பலரும் பல்வேறு காரணங்களைக் கூறி இந் நாடகத்தில் இருந்து தமது பங்களிப்பினை நிறுத்திக் கொண்டனர். எனது விழிப்புணர்வுச் செயற்பாடு தொடர்பான எண்ணத்தில் ஒரு கணம் இடி விழுந்த போது செல்வி. யோ.யாழினி அவர்கள் தன்னிடம் இருந்த தற்துணிவையும், திறமையையும் பயன்படுத்தி தனித்து ஒரு பெண் உத்தியோகத்தராக இறுதி வரை பல முக்கிய பாத்திரங்களை தானே தனியே பொறுப்பேற்று இந் நாடகத்தின் சிறப்புக்கு காரணமாக விளங்கியிருக்கின்றார். இவரை இந் நேரத்தில் பெருமையுடன் நான் பாராட்டுவதுடன் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் "அம்மா" வேடத்தினை பொறுப்பேற்று மிகவும் திறமையான நடிப்பின் மூலம் எல்லோரது மனதையும் கொள்ளை கொண்ட பீ.வின்சன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். அத்தோடு இந் நாடகத்தின் சகல பொறுப்புக்களையும் தாமே ஏற்று தலைமை தாங்கி நடாத்திக் கொண்டிருக்கும் கலைச்செல்வன் அவர்களுக்கும், மற்றும் தத்தமக்குரிய

பாத்திரங்களை செவ்வனே நடிப்பதோடு மட்டுமல்லாமல், தத்தமக்கு பகிர்ந்து வழங்கப்பட்ட பொறுப்புக்களையும் திறம்பட செய்யும் ஆற்றலுள்ள ஓங்காரரூபன், சாக்ஷன், பிரதீபன், சுபாஸ்கரன், தனுசுஜன், றஞ்சித் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதுமட்டுமின்றி இசையினையும், பாடலையும் நாடகத்திற்கு வழங்கி மெருகூட்டிய சீலன், கலைச்செல்வன், மற்றும் ஞானச்சந்திரன் அவர்களையும் பாராட்டி நிற்கின்றேன்.

மேலும், இந்நாடகத்தின் வெற்றிக்கு நாம் கேட்டவுடன் எந்த விதமான மறுப்பும் தெரிவிக்காமல் உறுதுணையாக இருந்து அனுசரணை வழங்கிவரும் நவாலியூர் அன்பர் T. சிறீதரன் அவர்களுக்கும், மேலும் UNDP நிறுவனத்திற்கும், இந் நிறுவனப் பிரதிநிதியான திரு. த. சதீசன் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச பிரிவிற்கும் முன்மாதிரியாக சிறுவர்களின் எதிர்கால உச்ச நலனைக் கருத்தில் கொண்டு எமது சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகத்தினரால் மிகவும் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படும் இவ் விழிப்புணர்வு நாடகச் செயற்பாட்டின் வெற்றிக்கு என்னுடன் உறுதுணையாக இருந்துவரும் எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள், அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்வதுடன், இந் நாடக அரங்காற்றுகைச் செயற்பாட்டினை ஆவணப்படுத்தும் நோக்குடன் இந் நூல் வெளியிடப்படுவது தொடர்பாகவும் ஆக்கமும், ஊக்கத்துடனும் செயற்பட்டு வரும் நாடகக்குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் இச் சமூகப்பணி செயற்பாடு தொடர்ந்தும் வெற்றிநடை போட என்னுடன் ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.


**திருமதி. பி. சத்தியவதனி,**
**சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**சண்டிலிப்பாய்.**

## நாடக ஆற்றுகையில் பங்குபற்றியோர் விபரம்

### நடிகர்கள்

- செ. சாள்ஸ் கலைச்செல்வன்
- க. ஓங்காரரூபன்
- ம. ஜோன் சாக்ஷன்
- என். தனுசுஜன்
- ந. ரஞ்சித்
- தே. பிரதீபன்
- மா. சுபாஸ்கரன்
- பீ. நிக்கலஸ் வின்சன்
- யோ.யாழினி

### பாடல்

- என். தனுசுஜன்

### இசைக் கலைஞர்கள்

- க. சீலன் (ஆர்மோனியம், பறை)
- யோ. ஞானச்சந்திரன் (டொல்கி)
- செ. சாள்ஸ் கலைச்செல்வன் (பின்னணிப்பாடல்)

### ஒப்பனை மற்றும் ஆற்றுகை வடிவமைப்பு

- க. சீலன் (கலை இலக்கியப் பேரவை)

புதிய வேலியின் முதல் நிகழ்த்துகை
யாழ் / சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் தின
நிகழ்வில் (2012.10.01) நிகழ்த்தப்பட்டது.

# புதிய வேலிகள்

அறிமுகம்

*(பார்வையாளரை நோக்கியபடி நடிகர்கள் வரிசையாக மேடையின் உட்புறமிருந்து பின்வரும் தாளக்கட்டினையும் அதற்கேற்ப பாடலினையும் பாடியாடியவாறு (மகிழ்வு நிலையுடன்) அரைவட்ட ஒழுங்கில் முன் மேடைக்கு வருவர்.)*

**தாளக்கட்டு** :- தனனன்னத் தானானனா –தனனன
தனனன்னத் தானானனா (2)

**பாடல்** :- எங்கள் பிள்ளைகளே.
இது உங்கள் கதைகளே.
தனனன்னத்…………..
பள்ளி செல்லும் காலம் - அது
பசுமையான காலம்.
பாதை மாறிச் சென்று
அழிந்திடலாமோ நாம்.
தனனன்னத்…………..
சிறுவர் உரிமைகள் - அது
எங்களின் உரிமைகள்.
பள்ளி செல்லுவது - அது
எங்களின் கடமைகள்
தனனன்னத்…………..

*(பாடலின் நிறைவில் நடிகர்கள் பார்வையாளரை நோக்கியவாறு அரைவட்ட வடிவில் ஒரு கால் மடித்து, மறுகாலை சற்று உயர்த்தி மெதுவாக அமர்ந்திருப்பர். பின் ஒவ்வொருவராக மேடையின் முன் பகுதிக்கு வந்து தமக்குரிய வசனத்தைப் பேசிவிட்டு அவரவர் இடத்தில் மீண்டும் சென்று அமர்வர்.)*

உரைஞர் 1 :சின்னஞ்சிறு முகங்கள் தான், பென்னம் பெரிய சந்தோசத்தைத் தருகின்றன.

உரைஞர் 2 :பத்து மாதங்கள் காத்திருந்து பெற்று வளர்த்தெடுத்த பேரின்ப சுரங்கங்கள் பிள்ளைகளே!

உரைஞர் 3 :வீட்டின் எதிர்காலம், நாட்டின் எதிர்காலம், உலகின் எதிர்காலம்… இந்தச் சின்னஞ் சிறு கரங்கள் தான்.

உரைஞர் 4 :வேலியே பயிரை மேய்கின்றது. இமைகளே கண்களைக் குற்றுகின்றன.

உரைஞர் 5 :பாதுகாப்பு! யாருக்கும் பாதுகாப்பு இல்லை.

உரைஞர் 6 :ஓ…! குடும்பத்தில் பாதுகாப்பு குறைந்துவிட்டது.

உரைஞர் 7 :மனிதரில் மனிதர் நம்பிக்கையில்லை, தாயிடம் குழந்தைக்குப் பாதுகாப்பில்லை, கணவனிடம் மனைவிக்குப் பாதுகாப்பில்லை.

உரைஞர் 8 :நாங்கள் மனிதர்கள்… சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள்.

உரைஞர் 1 :அன்பான பிள்ளைகளே! உங்களைக் காப்பது எங்களின் கடமை.

உரைஞர் 2 :ஆனால் அதைவிட உங்களை நீங்களே பாதுகாக்க வேணும்.

உரைஞர் 3 :அழகாகப் பேசுபவர்கள் சிலர் ஆபத்தானவர்கள்.

உரைஞர் 4 :உதவி செய்பவர்கள் சிலர் உபத்திரவக்காரர்கள்.

உரைஞர் 5 :பாதுகாப்பாய் இருப்போம்... மற்றவரையும் பாதுகாப்போம்...

*(இவ்வாறு கூறிய பின்னர் நடிகர்கள் அனைவரும் எழுந்து தாளக்கட்டிற்கேற்ப அசைந்தபடி மேடையை விட்டு வெளியேறுவர்.)*

## காட்சி 01

*-அப்பா வேகமாக உட் பிரவேசித்து அவசர வேலைகளில் ஈடுபடுகின்றார். தொடர்ந்து மகள் உட்பிரவேசித்து-*

மகள் :அப்பா...!! அப்பா...!!

அப்பா :என்ன பிள்ளை,!

மகள் :அப்பா இண்டைக்கப்பா, பள்ளிக்கூடத்தில ஒரு கூட்டம் நடந்தது.

அப்பா :உன்ர கதையைக் கேக்க நேரமில்லை...! எனக்கு உதப்பற்றியெல்லாம் தெரியாது. போய் அம்மாட்டச் சொல்லு.

மகள் :அம்மா...! அம்மா...!

அம்மா : என்ன பிள்ள, ஏன் கத்திக்கொண்டிருக்கிறாய்?

மகள் :இண்டைக்கம்மா பள்ளிக்கூடத்தில ஒரு கூட்டம் நடந்தது.

அம்மா :கூட்டமோ! உனக்கு ஒவ்வொரு நாளும் தானே கூட்டம் நடக்குது, போ,, போய் பாக்கிற பிராக்கைப் பார்...!

மகள் :என்ர கதையை அப்பாவும் கேக்கிறாரில்லை... அம்மாவும் கேக்கிறாவில்லை... என்னைத் தனியத் தனிய விட்டிட்டுப் போகினம்.

*- இவ்வேளை மேடையின் பின்புறத்தால் ஒருவர் வருகின்றார். அவர் சிறுமியை தவறான எண்ணத்தோடு நோக்குகின்றார் போலும் -*

வந்தவர் :சுமதி... சுமதி... வீட்டயே நிக்கிறாய்?

மகள் :ஓம், இண்டைக்கு ரியூசன் இல்ல அதுதான் வீட்ட நிக்கிறன்.

வந்தவர் :அப்ப! தனியவே நிக்கிறாய்... அம்மாவையளும் இல்லையே?

மகள் :ஓம், தனியத்தான் நிக்கிறன்.

வந்தவர் :அப்ப... கடைக்கொருக்காப் போட்டு வாறியே?

மகள் :கடைக்கோ? என்னத்துக்கு?

வந்தவர் :கடனா 2 சிகரெட்டும், வெத்திலையும் வாங்கிக்கொண்டு வாறியே?

மகள் :சிகரெட்டோ! நான் மாட்டன்.

வந்தவர் :ஏன்?

மகள் :ரீச்சர் சொன்னவா சின்னப் பிள்ளையள் சிகரெட் வாங்கக்கூடாதெண்டு...

வந்தவர் :அதெல்லாம் சும்மா. நீ... உனக்கொரு மிக்சர் பைக்கெட்டையும் வாங்கிக்கொண்டு வாவன்.

மகள் :அப்ப நான் வாங்கிக்கொண்டு வாறன்...

*-சுமதி கடைக்குப் போய்ப் பொருட்களை வாங்கிக் கொண்டு வரல்... வந்தவர் சுமதியை மறைவிடத்திற்கு அழைத்தல்-*

மகள் :இந்தாங்கோ ...

வந்தவர் :இஞ்சால வா பிள்ள....உள்ளுக்கை கொண்டு வா பிள்ள... இஞ்ச வாவன் பிள்ள...

மகள் :அம்மா... அம்மா... அவர் என்னைத் தொட்டுத் தொட்டுக் கதைக்கிறார்... எனக்கெண்டாப் பிடிக்கேலை. அருவருப்பாய் இருக்கு... பயமா இருக்கம்மா... இதுதான் நான் தனிய. வீட்ட நிக்க மாட்டன், நிக்க மாட்டன் எண்டு சொல்லுறனான்... தேவையில்லை

*-மேற்படி காட்சி உறை நிலையடைய மெதுவாக அரங்கினுள் உரைஞரும் சிறுவரும் நுழைவார், சிறுவர்கள் ஏதும் விளங்காதவர்களாக உரைஞரைப் பார்ப்பர்-*

உரைஞர் :என்ன எல்லோரும் முழுசுறியள், என்ன நடந்ததெண்டு விளங்கினதோ?

சிறுவர் 1 : ஒண்டும் விளங்கேல்ல

உரைஞர் : இப்ப நடந்தது ஒரு சிறுவர் துஸ்பிரயோகம். ஏதோ ஒரு வகையில பெற்றோர்ர கண்ணில மண்ணைத் தூவிப்போட்டு நெருங்கின உறவினரோ நன்கு அறிந்தவரோ உங்கட உடம்பில தவறான முறையில் கை வைக்கிறது பாரதூரமான தண்டனைக்குரிய குற்றம்.

சிறுவர் 2 :அப்ப எங்கட அப்பா தொட்டால்?

சிறுவர் 1 :அப்ப அப்பப்பா தொடுறது?

உரைஞர் :பிள்ளையள் எல்லாத்தையும் தவறா எடுக்கக் கூடாது

உரைஞர் :அப்பா எண்டாலும், யாரெண்டாலும் உங்கள்ல உண்மையான பாசத்தோடையும், அக்கறையோடையும் இருக்கிறவையள உங்களுக்கு அடையாளம் காண முடியும்தானே.. தவறான எண்ணத்தோட பழகிறவையைப் பற்றித்தான் நான் கதைக்கிறன்.

சிறுவர் 2 :அப்ப எங்கள யாரும் தொட ஏலாது.

உரைஞர் :ஓம், உங்கட உடல் உங்களுக்குத்தான் சொந்தம். உங்கள மீறி யாராவது கை வைச்சால் உடன உங்கட பெற்றோரிட்டையோ, ஆசிரியரிட்டையோ, அல்லது வேறு நம்பிக்கையான ஆரிட்டையோ உடனடியாக அறிவிக்க வேண்டும்.

சிறுவர் 1 :அப்பிடி அறிவிச்சா!

உரைஞர் :அவைக்கு தண்டனை கிடைக்கும்.

சிறுவர் 2 :தண்டனையோ?

உரைஞர் :ஓம் ஓம் குறைந்தது ஐந்து வருட தண்டனையும், பாதிப்பின் தன்மைக்கேற்ப தண்டப்பணமும் அறவிடப்படும். இனிமேல் நீங்களும் இப்படி தவறான தொடுகைகளில ஈடுபடாதைங்கோ, உங்கள ஆரும் தவறான நோக்கோடு தொடுவதையும் அனுமதிக்காதேங்கோ. (பார்வையாளர்களைப் பார்த்து..) என்ன நான் சொல்லுறது உங்களுக்கு விளங்குது தானே... இனி எச்சரிக்கையோட நடந்துகொள்ளுவீங்கதானே...

*-இவர்கள் இருவரும் அரங்கை விட்டு வெளியேற மேடையின் வலது முன் பகுதியிலிருந்து இடதுபுற பின் பகுதியை நேக்கி மூவர் நகருகின்றார்கள். அவர்கள் ஏதோ ஓர் பொருளைப் பார்த்து ஆச்சரியத்துடன்-*

## காட்சி 02

ஒருவர் : புது மொடல் ஒன்று.

மற்றவர் : நல்ல வடிவா இருக்கு.

இன்னொருவர் : அதில கமறாவும் இருக்குது.

*-இவர்கள் பேசிவிட்டு நிற்க, இடது புறப் பின் பகுதியிலிருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்று பாடலுக்கு ஆடியவாறு பிரவேசிக்கின்றது... அதற்கேற்றவாறு ஏனையவர்களும் அரங்கில் அசைகின்றனர்-*

பாடல் தந்தானே தானே தானே

தந்தந்தானே தானே தானே (2)

சீனாவில் தான் பிறந்து,

சக்திகள் மிக நிறைந்து (2)

ஊருக்குள் ஓடி வந்தேனே – நானும் உங்கள்

ஊருக்குள் ஓடி வந்தேனே (2)

தூரத்தில் உள்ளவரை

வார்தையால் நான் இணைப்பேன் (2)

அவசர வேளைகளிலும் - உங்களுக்கு

ஆதரவாயிருப்பேனே (2)

அநியாயம் செய்பவர்

கையிலும் வாழ்கின்றேன்

ஆக்கங்கள் செய்பவர்

பையிலும் தூங்குகின்றேன்... (2)

வருமானம் கொட்டிக் கொடுப்பேன்

கோடி கோடி

வருமானம் கொட்டிக் கொடுப்பேன் (2)

*-பாடல் நிறைவில் கையடக்கத் தொலைபேசி மேடையின் மத்தியில் ஒரு உயரத்தில் நிற்கின்றது. அவருடன் ஆடிய சிறுவர்கள்-*

சிறுவர் 1 :நானும் அப்பாட்டைச் சொல்லி ஒண்டு வாங்கப் போறன்.

சிறுவர் 2 :நானும் ஒண்டு வாங்கப் போறன்.

சிறுவர் 3 :எனக்கு மாமா கனடாவில இருந்து ஒண்டு கொண்டு வந்திருக்கிறார்.

சிறுவர் 4 :கடனைக் கிடனைப் பட்டெண்டாலும் இப்படியொரு போன் வாங்கவேணும்.

*-சிறுவர்கள் வெளியேற தாயும் தந்தையும் பிரவேசிக்கின்றனர்-*

அம்மா :இஞ்சேயுங்கோ... இஞ்சேயுங்கோ...

அப்பா :என்ன கமலம், சொல்லு.

அம்மா :இவள் எங்கட பிள்ளைக்கு ஒரு Phone வேணுமாம் எண்டு அடம்பிடிக்கிறாள். அதுதான் என்ன செய்யலாமெண்டு யோசிக்கிறன்...

அப்பா :என்ன Phone ஆமோ? நாங்க இருக்கிற கஷ்டத்தில காசுக்கு எங்க போறது? வேண்டித் தரேலாதெண்டு சொல்லு.

அம்மா :இல்லையப்பா, அவள் பிடிவாதம் பிடிக்கிறாள். பிள்ளை பள்ளிக்கூடம் போக, வரேக்குள்ள... போய்ச் சேருதா? வருகுதா? எண்டு கேட்க ஒரு Phone வேணுமெண்டுறாள். நானும் யோசிச்சனான், அதுவும் சரிபோலத்தான் கிடக்கு. ஒரு பாதுகாப்பாகவும் இருக்குமெல்லே...

அப்பா :இப்பத்தைப் பெடி பெட்டையள் Phone ஐ வைச்சுக்கொண்டு படுகிற பாடு தெரியுமெல்லே? தெரிஞ்சு கொண்டும் Phone வாங்கிக் குடுக்கப் போறியோ?

அம்மா :எங்கட பிள்ளை அப்படிச் செய்ய மாட்டாள். எனக்கு நம்பிக்கை இருக்கப்பா.

அப்பா :சரி முடிவெடுத்திட்டாய் இனி என்ர பேச்சைக் கேட்கவா போறாய்? என்னத்தை அடைவு வைச்செண்டாலும் வாங்கிக்குடு. என்னட்ட மட்டும் ஒண்டும் கேட்க வேண்டாம் சொல்லிப் போட்டன்.

*-தாயும் தந்தையும் வெளியேறுகின்றனர்... சிறுமி கோபத்துடன் அங்கு வருகிறாள்-*

மீரா :அம்மா…அம்மா

அம்மா :என்ன பிரச்சினை! இவ்வளவு கோபமாயிருக்கிறாய்? ஏதும் பிரச்சினையே?

மீரா :என்னவோ?! தம்பி ஏன் என்னை Road டடில இருந்து கூட்டி வரேல்ல? நான் Bus இல இருந்து இறங்கி எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தன்! இவ்வளவு நேரமும் அவனைக் காணேல்ல. நடந்து தான் வந்தனான். இப்ப எங்க அவன்?

அம்மா :இஞ்சதான் பிள்ள நிக்கிறான். நீ வர நேரஞ்செல்லுமாம், ஆறுதலாய்ப் போவம் எண்டுட்டு இருந்தவன்.

மீரா :ஆறுதலாய்ப் போவம் எண்டுட்டோ? இது நல்ல கதை, இதுக்குத்தான் நான் சொல்லுறனான், எனக்கொரு Phone வாங்கித் தாங்கோ எண்டு. இப்ப பாருங்கோ, நான் Bus ஆல இறங்கி Phone பண்ணியிருந்தா தம்பி ஒடி வந்திருப்பான். எனக்குத் தெரியாது இனியாவது எனக்கொரு வேண்டித்தாங்கோம்மா. Please அம்மா..

*- தாய் Phone ஐ சிறுமியிடம் கொடுத்தல்-*

அம்மா :இந்தா பிள்ள, நீ கேட்ட Telephone. கஷ்டப்பட்டு நகை அடைவு வைச்சு வேண்டிக்கொண்டு வந்திருக்கிறன். என்னவோ கவனமாகப் படிச்சு முன்னுக்கு வரவேணும் பிள்ள.

மீரா :அம்மா எண்டால் அம்மா தான். நான் படிக்கிறன் தானேம்மா பிறகென்ன?

*-அம்மா செல்ல சிறுமி சந்தோசத்துடன் Phone ஐ கையாளுதல். phone ஐப் பார்த்தபடி மகிழ்வுடன் தனக்குள் பேசிக்கொள்ளல்*

மீரா :இனி நான் என்ர friends எல்லாரோடையும் கதைக்கலாம். Camera ல photo வும் எடுக்கலாம். Face Bookஉம் பார்க்கலாம் (*என்று கூறிவிட்டு சிறிய யோசனையின் பின் உடனே*)ஆ.....இப்ப என்ர friend ஓட கதைச்சுப் பார்ப்பம். (*என்றபடி ஏதோ ஒரு number க்கு dial பண்ணல்,பின்பு உடனே அறிந்தவளாய்.....*)ஐயோ Wrong Number க்கு போயிட்டுது. cut பண்ணுவம்.

*-உடனே அதே Number இலிருந்து மகளுக்குக் Call வரல்-*

மீரா :(*Call ஐ Receive பண்ணி*) Hello... Hello! யார் கதைக்கிறீங்க?

மகேஸ் :நீங்கதானே Call எடுத்தீங்க, நீங்க யார் கதைக்கிறீங்க?

மீரா : sorry, wrong number.

*-எனக்கூறி cut பண்ணி விடல். மீண்டும் Call வரல்-*

மீரா :hello உங்களுக்கு இப்ப என்ன வேணும்?

மகேஸ் :நீங்க தான் வேணும்.

மீரா :உங்களுக்கென்ன, லூசா?

மகேஸ் :ஓம் உங்க மேல தான் லூசு.

மீரா :வைடா போனை….

*-என கோபத்துடன் போனை cut பண்ணி விட்டு sorry சொல்வதற்காக மீண்டும் எடுத்தல்-*

மீரா :hello very sorry நான் உங்களுக்கு பேசிட்டன்….very sorry

மகேஸ் :பரவாயில்லை நீங்கதானே பேசினது…

*-இவ்வாறு இருவருக்குமிடையே உரையாடல் தொடர்ந்து உச்சக் கட்டத்தை அடைகின்றது.*

மகேஸ் :நான் உங்களைப் பார்க்கோணும் போல இருக்கு… Town Bust Stand இற்கு ஒருக்கா வாங்களேன்..

மீரா : நானோ,, நான் வரமாட்டன்.. நான் என்னண்டு வாறது.

மகேஸ் : Class இற்கு போறன் எண்டு சொல்லிப் போட்டு வாங்களன்… நாளைக்கு 10 மணி போல என்ன…

மீரா : சரி வாறன்,,, ஆனா… வேளைக்குப் போயிடுவன்.

பாடல் : காலமும் வீணாகிப் போகுது பாருங்கோ
மனங்களும் பாழாகிப் போகுது பாருங்கோ
ஆசையில் நெஞ்சங்கள் அழியுது பாருங்கோ
தேசமும் நாசமாய் போகுது பாருங்கோ

*-இவர்களுடைய தொலைபேசி உரையாடல் நடைபெறும் பொழுது தொலைபேசி உருவம் இவர்களை வழிநடாத்துவது போல் மேடையில் அசையும். இது அவர்கள் இருவரையும் ஆட்டுவிப்பது போல் இருக்கலாம். உரையாடலின் உச்சத்தில் அவர்களை மேடைக்கு வெளியே இழுத்துச் செல்கின்றது. பின் சிறுமி மட்டும் அழுது துவண்ட வண்ணம் மேடையின் மத்தியில் வந்து அமருகின்றாள். அதைத் தொடர்ந்து மேடைக்குச் சிலர் வருகின்றார்கள், அவர்கள் அவளை உற்று நோக்கி-*

ஒருவர் :படிக்கிற வயசில இதுவும் ஒரு வேலையோ

மற்றொருவர் : படிப்பும் போச்சு, வாழ்க்கையும் போச்சு, எல்லாமே போச்சு

இன்னொருவர் :எல்லாரும் ஆளுக்காள் கதைக்கிறியள், இப்படிப் பிள்ளையள் அநியாயமாப் போறதற்கு நாங்களும் தான் காரணம்

வேறொருவர் :என்ன நடந்தாம்.... சுசு........ சுசு....... சுசு என்னால நம்பேலாமல் இருக்கு

*-இவ்வேளை அம்மா அங்கு வருகின்றார்-*

அம்மா : ஐயோ ...... எல்லாம் நாசமாப் போச்சுதே,, எங்கட பிள்ளையின்ர வாழ்க்கையை நாங்களே அழிச்சுப் போட்டம். Tele phone ஐ பிரியோசனமெண்டு வேண்டிக் கொடுத்து கடைசீல அந்த Tele phone ஆலேயே எங்கட பிள்ளையின்ர வாழ்க்கை வீணாகிப் போச்சு.

*-உரைஞர் வருகிறார்-*

உரைஞர் :என்ன அப்படிப் பார்க்கிறியள் அம்மா சொன்னதைக் கேட்டியளே? இப்படித்தான் இண்டைக்கு எல்லா இடத்திலையும் நடக்குது. நீங்களும் கவனமாக இருக்க வேணும். Hand Phone ஆல வந்த காதலால, பிள்ளை கருவை சுமந்துகொண்டு வந்திருக்கு... நீங்களும் இதுகளில ஏமாந்து போடாதேங்கோ... இப்படி ஏமாத்திறவைக்கு சட்டத்தில் தண்டனை இருக்கு. 16 வயதுக்குள் விரும்பியோ விரும்பாமலோ பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டால்.. கற்பழிப்புச் சட்டத்தின் கீழ் பாரிய குற்றமாகும். இதற்கு குறைந்தது 7 வருடமும் கூடியது 20 வருடம் சிறைத்தண்டனை வழங்கப்படும். பாதிப்பின் தன்மைக்கேற்ப தண்டப்பணமும் அறவிடப்படும்.

*-உரைஞர் வெளியேறுகின்றார். பின் உற்சாகமாக ஆடி ஓடி சிறுவர்கள் அங்கு வருகின்றனர்-*

## காட்சி 3

சிறுவன் 1 : நான் இனிப் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை, மாமா என்னை வெளிநாட்டுக்கு எடுக்கப் போறார்.

சிறுவன் 2 : அப்பா உழைக்கிறது காணாது... நானும் வேலைக்குப்போவம். படிச்சு என்னதான் செய்யிறது.

சிறுவன் 3 : எனக்கு... பள்ளிக்கூடம் போகவே விருப்பமில்லை... படிப்பு எண்டாலே வெறுப்பாயிருக்குது.

உரைஞர் : பிள்ளையள் இப்பிடிப் பேசக் கூடாது. படிக்கிற வயசில படிச்சாத் தான் எதிர்காலம் நல்லா இருக்கும்... "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று சொல்லியிருக்கினம் தானே...!

சிறுவன் 1 : நீங்கள் போய் பிச்சை எடுங்கோ, எங்கட அலுவல் எங்களுக்குத் தெரியும்.

உரைஞர் : உங்களுக்கு விளங்கேல்ல, பள்ளிப் பருவம் பசுமையான காலம். நல்ல மனிசரா நாங்கள் உருவாகிற நேரம் பள்ளிப் படிப்பை மறுத்தால் நிறையப் பிரச்சினை வரும்.. எதிர்காலம் இருளாகப் போகும்...

சிறுவன் 2 : இருளாகினா நாங்கள் Light போடுவம். நீங்கள் உங்கட அலுவலைப் பாருங்கோ.

-இவ்வேளை மேடையின் பின்புறத்தே இருந்து அழகிய போத்தல்கள், பொட்டலங்களுடன் ஒருவர் *பிரவேசிக்கின்றார்*-

கஞ்சா விற்பவர் : நீங்கள் எடுத்த முடிவு தான் சரி. இஞ்ச வாங்கோ... எனக்குக் கிட்ட வாங்கோ... இதுகளைப் பாத்தனிங்களோ இதுகளின்ர வடிவை, நிறத்தைப் பாருங்கோ...

**சிறுவன் 3** : அழகாத்தான் இருக்குது. தொட்டுப் பாக்க ஆசையாவும் இருக்கு…

**கஞ்சா விற்பவர்** : தொட்டுப் பார்க்கிறதென்ன, சாப்பிட்டு! குடிச்சே பார்க்கலாம்.

**எல்லோரும்** : அப்படியே! தாங்கோ தாங்கோ

**உரைஞர்** : பிள்ளையள் இது ஆபத்தான பொருள். மனிசரை அழிக்கும். நோயாளி ஆக்கும். கிட்டப் போகாதையுங்கோ! தொட்டுப் பாக்காதையுங்கோ!

**கஞ்சா விற்பவர்** : வயசு போனவையள் இப்பிடித்தான் அலட்டுவினம். அவைக்கு நாகரிகம் தெரியுமே, நீங்கள் கிட்ட வாங்கோ…

**உரைஞர்** : பல மனிசரை அழிச்சு, பல குடும்பங்களைச் சீரழிச்சு, பிள்ளையளின்ட படிப்பையும் அறிவையும் நாசமாக்கிற போதைப் பொருட் பாவனை கூடாது. கிட்டப் போகாதையுங்கோ.

**கஞ்சா விற்பவர்** : உதெல்லாம் பொய்! இது மனிசரை உசாரா வச்சிருக்கும். உடம்பு வைக்கும், சந்தோசமா இருக்கலாம்.

*-சிறுவர்கள் எல்லோரும் சேர்ந்து உரைஞரைத் தள்ளி ஒதுக்கி விடுகின்றனர். பின்னர் போதைப் பொருள் விற்பவரிடம் சென்று அதனை வாங்கி உண்பர். அவ்வேளை இன்னொரு சிறுவன் (நல்லவன்) உட்பிரவேசிக்கிறார்-*

**இன்னொரு சிறுவன்** : எங்கட அப்பாவும் இவையள மாதிரி சின்ன வயசில குடிச்சதால இப்ப மனநோயாளியா இருக்கிறார்.
நான்….நான்….இவையள மாதிரி குடிக்கமாட்டன். உங்கள மாதிரி நல்லாப் படிக்கப் போறன். எங்கட சமுதாயதில ஒரு நல்ல மனிசனா வாழப் போறன். நான் குடிக்கமாட்டன்…

*-என்று கூறி மேடையின் முன் வலதில் அமர்தல், உரைஞர் கோபத்துடன்-*

**உரைஞர்** : டேய்...உங்கட வயசென்ன, என்ர வயசென்ன.சொல்லச் சொல்லக் கேக்காமல் குடிச்சுக் கொண்டிருக்கிறியள் என்னடா. இஞ்சால வாங்கோடா...

*-சிறுவர்கள் அனைவரும் சேர்ந்து –*

**சிறுவர்** : டேய் அடிங்கடா இவரை...- *உரைஞரை அடித்தல்-*

**உரைஞர்** : தம்பியவை சின்ன வயசில வன்முறை கூடாது.

*-சிறுவர்கள் இந்த மோதலுக்கு நல்ல நண்பனையும் துணைக்கு அழைத்தல்-*

**சிறுவன் 1** : டேய் வாடா மச்சான். வந்து இவரை என்னென்டு கேளடா...

**இன்னொரு சிறுவன்** : டேய் என்னடா....ஐயா உங்கட வயசென்ன அவங்கட வயசென்னய்யா. போங்கய்யா போங்க....

**உரைஞர்** : தம்பி நீ நல்ல பெடியன். இந்தக் குடிகாரங்களோட சேர்ந்து நீயும் அழிஞ்சு போகப் போறியே?

**இன்னொரு சிறுவன்** : ஐயா இவங்கள் என்ர சினேகிதர்கள். இவங்களுக்கு ஒண்டெண்டால் நான் உடனே வருவன். போங்கய்யா.......

*-எல்லோரும் உரைஞருக்கு அடித்தல், அவ்வேளை பொலீஸார் ஒருவர் மேடைக்கு வருகின்றார்-*

**பொலீஸ்** : அரசாங்கத்தில கடுமையான சட்டங்கள் இருந்தும்,தண்டனைகள் இருந்தும், சிறுவர்கள் மது போதைப் பொருட் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். பலர் அதற்குத் துணை போகின்றார்கள். சட்டத்திற்கு ஏற்றத் தாழ்வுகளே கிடையாது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.

*-பொலீஸார் இன்னொரு சிறுவனையும் (நல்ல சிறுவன்) மற்றும் சிறுவன் 2 யும் கைது செய்து சிறையில் அடைக்க ஏனைய சிறுவர்கள் தப்பி ஓடுகின்றனர். தப்பி ஓடியவர்கள் மீண்டும் மேடைக்கு வருகின்றனர்-*

**சிறுவன் 1** : ஐயோ தலையிடிக்குது ஒண்டுமே ஞாபகமில்லை.

**சிறுவன் 3** :உடம்பெல்லாம் எரியுது.

**சிறுவன் 1** : கால், கை சோருது, எழும்பி நடக்கேலாமல் இருக்குது.

**கஞ்சா விற்பவர்** : என்ர அலுவல் முடிஞ்சுது. இனி அவையைத் தேடி நான் வரத் தேவையில்லை. அவையே என்னைத் தேடி வருவினம்.

*-சிறுவர் அவதியுற்று மண்ணில் விழ வைத்தியர் பிரவேசிக்கின்றார்-*

வைத்தியர் : இந்தமாதிரி மதுபானம், சிகரெட் போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையானால் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் நோய்வாய்ப்பட வேண்டியிருக்கும்... ஈரல் அழற்சி, ஞாபக மறதி, செங்கன்மாரி, தூக்கமின்மை, வலிப்பு, நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்கள் வரும்.. இவற்றை விட AIDS போன்ற கொடிய நோய்க்கும் உள்ளாக வேண்டி வரும். இதனால் வைத்தியசாலைச் செலவு, உயிரிழப்பு, பணவிரையம் ஏற்படும். பிள்ளைகளே இப்படியெல்லாம் நடந்தால் சமூகத்தில் மதிப்பு இருக்குமோ? ஒருகணம் யோசிச்சுப் பாருங்கோ.. உங்கட நண்பர்கள் புகைப்பிடிக்கவோ, மது அருந்தவோ நட்பாக அழைத்தால் அதைத் தவிர்த்து விடுங்கள். "எம்மிடமுள்ள ஓர் ஒற்றை உயிரும் ஒரே ஒரு முறை வாழப் போகும் இந்த வாழ்வும் விலை மதிக்க முடியாதவை. ஆதலால் நாமெல்லோரும் ஆரோக்கியமாக வாழ்வதே நன்று''

உரைஞர் : இப்பிடி போதைவஸ்து பாவிப்பவர்களுக்கு தண்டனை இருக்கு உங்களுக்குத் தெரியுமோ? இவையள் 16 வயதுக்கு உட்பட்ட சின்னப் பெடியங்கள். இவையள் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவது சட்டப்படி குற்றமாகும். இவையளுக்கு பெரிய தண்டனை இருக்கு. இப்படி ஏதாவது குற்றங்கள் நடப்பதை நீங்கள் அறிந்தால் அருகிலுள்ள பொலீஸ் நிலையத்திற்கு அறியத்தாருங்கள். இவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்போம்.

எங்கள் பிள்ளைகளே... பாடல் ஒலிக்க ஏனைய ஆற்றுகையாளர்கள் மேடைக்கு வருகின்றனர்-

உரை 1 : பிள்ளைகள் நீங்கள் தான் எங்கட சமுதாயம்...

உரை 2 : ஓம்... எங்கட சமுதாயத்தை நீங்கள் தான் பாதுகாக்க வேணும்

உரை 3 : அதுக்கு முதல் நீங்கள் பாதுகாப்பாய் இருக்க வேணும்

உரை 4 : பாலியல் துஸ்பிரயோகம் போதைப் பொருட் பாவனை, நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் தவறான வழிகாட்டுதலிலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளவேணும்.

- எங்கள் பிள்ளைகளே... பாடல் முடிவடைய நாடகம் தொடர்பான கலந்துரையாடலுக்கு வழிப்படுத்தலாம் -

# புதிய வேலிகள் நாடக நிகழ்த்துகை விபரம்

## பாடசாலை நிகழ்வுகள்

| திகதி | பாடசாலை | நேரம் |
|---|---|---|
| 02.10.2012 | யா ஆனைக்கோட்டை மெ.த.மி.க பாடசாலை | 11.30 |
| 08.10.2012 | யா பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை<br>யா பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | 11.00<br>12.00 |
| 09.10.2012 | யா மானிப்பாய் இந்துக் கல்லூரி | 12.45 |
| 12.10.2012 | யா இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்<br>யா இளவாலை கென்றியரசர் கல்லூரி | 11.00<br>12.30 |
| 15.10.2012 | யா / ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் மகா வித்தியாலயம்<br>யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை<br>யா/ஆனைக்கோட்டை குணபாலன் வித்தியாசாலை | 11.00<br>12.30<br>01.30 |
| 16.10.2012 | யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை<br>யா / மானிப்பாய் சென் ஆன்ஸ் பாடசாலை | 11.30<br>01.00 |
| 18.10.2012 | யா / பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்<br>யா / பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க பாடசாலை | 11.00<br>12.30 |
| 19.10.2012 | யா / மாதகல் நுணசை வித்தியாலயம்<br>யா / மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்<br>யா / சில்லாலை றோ.க.த.க பாடசாலை | 11.00<br>11.00<br>12.30 |
| 22.10.2012 | யா நவாலி மகா வித்தியாலயம்<br>யா நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம் | 11.00<br>12.30 |
| 23.10.2012 | யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி<br>யா / சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்<br>யா / சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை | 10.00<br>11.30<br>11.30 |
| 26.10.2012 | யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி | 01.00 |
| 22.11.2012 | யா / சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் | 10.00 |
| 22.11.2012 | உடுவில் சாள்ஸ் மகா வித்தியாலயம் | 12.00 |
| 04.12.2012 | நெல்லியடி மகா வித்தியாலயம் | 10.00 |
| 06.12.2012 | உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை | 10.00 |

## விசேட நிகழ்வுகள்

| திகதி | பிரதேசம் | நிகழ்வு | நேரம் |
|---|---|---|---|
| 05.10.2012 | மானிப்பாய் பிரதேச சபை | சிறுவர் தினம் | 12.00 |
| 09.10.2012 | நவாலி கிழக்கு கிராமம் | முதியோர் தினம் | 04.00 |
| 10.10.2012 | யா/இந்து மகளிர் கல்லூரி | உளநல நாள் | 12.00 |
| 03.11.2012 | நல்லூர் பிரதேச செயலகம் | | |
| 06.11.2012 | சாவகச்சேரி மாநகர சபை | சிறுவர் தினம் | 11.00 |
| 12.11.2012 | ஆனைக்கோட்டை முள்ளி கிராமம் | | 03.00 |
| 13.12.2012 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | | 12.00 |
| 20.12.2012 | காக்கை தீவு | | 02.00 |
| 23.12.2012 | நாவலர் கலாசார மண்டபம் | மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணி மாநாடு | 12.00 |
| 20.12.2012 | சாவற்கட்டு (சுதுமலை) | | 4.00 |
| 24.12.2012 | சாந்தை | | 4.00 |
| 24.12.2012 | உயரப்புலம் (மாரீசன்கூடல்) | | 5.30 |

## ஆற்றுகை குறித்த அனுபவப் பகிர்வுகள்.

### பாராட்டு மழையில் நனையும் "புதிய வேலிகள்"

**"புதிய வேலிகள்"** என்னும் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு நாடகம். மேற்படி நாடகத்தினை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிபயிலுனர்களின் அறிமுக வாரத்தில் தாமாகவே செயற்படுத்த முன்வந்தமை முதலில் அனைவராலும் வரவேற்கத்தக்க ஓர் சிறப்பான முன்னுதாரணமாகும். இதற்கு முதலில் ஒத்துழைப்பு நல்கிய சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு.எஸ்.முரளிதரன் அவர்களிற்கு எம் குழாம் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

இவ் விழிப்புணர்வு நாடகமானது தன் கருப்பொருளினை விளக்குவதற்கு எளிமையான வார்த்தைப் பிரயோகம் அதனோடு இணைந்த பாடலாக்கங்கள், இசையோட்டங்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றினைப் பிரயோகித்தமை இதில் பங்காற்றிய பட்டதாரிப் பயிலுனர்களின் முயற்சியும், ஆர்வமும், பரந்தநோக்கமும் எம்மை மெய்சிலிர்க்க வைத்த விடயங்களாகும்.

இந் நாடகத்தில் பங்காற்றிய கலைஞர்கள் சந்தோசத்துடனும், உற்சாகத்துடனும் தமது விடயத்தை உற்று நோக்கிய பார்வையாளருக்கு படைத்தளித்தமையினை நாடகம் நிறைவுற்றதும்

அவர்களின் பாராட்டுமழையில் நனைவுற்றபோது அவர்களுக்கு மேலும் உற்சாகமளித்துள்ளது.

சண்டிலிப்பாய் கோட்டத்தில் குறிப்பாக கனிஸ்ட உயர்தரப் பாடசாலைகளில் மேடையேற்றியமை மட்டுமன்றி மாவட்டமெட்ட விழாக்களிற்கும் சென்று மாவட்ட செயலகத்தினராலும் பாராட்டுப் பெற்றுள்ளனர். மேலும் தற்போது பிற பிரதேசப் பிரிவுகளிற்கும் இந்நாடகத்தினை மேடையேற்றுவதற்கு விண்ணப்பம் கோரியுள்ளமையும் இவர்களின் படைப்பாற்றலினை மேலும் மேலும் வலுவாக்குகின்றது.

இக் கலைஞர்கள் இம் மேடையேற்றங்களை ஓர் சுமையாக அன்று சமூக நலநோன்பு அடிப்படையில் மனப்பூர்வமாக உழைத்தமை மீண்டும் மீண்டும் புகழ்ச்சிக்குரியது.

அத்துடன் இன்னொரு வியமாக ஆண் கலைஞர் ஒருவர் பெண் வேடம் ஏற்று நடித்தமை அவரின் தனித்திறமையை நாட்டியுள்ளது. அவரின் பாத்திரமும் படைப்பும் தனிப்பட்டமுறையில் பாராட்டுக்குரியது.

அத்துடன் தனிப் பெண்மணி (யோ.யாழினி) தனது துணிச்சலான படைப்பினை வெளிப்படுத்தியதும் பார்ப்பவர் மனதில் ஆழமாகப் பதிந்தது நேரிலே பார்த்த எனது அனுபவம்.

அதே போல மற்றைய கலைஞர்கள் அனைவரும் தம் பணியை சரிவரச் செய்து எமது செயலகத்திற்கு பெருமை சேர்த்தமை வரலாற்றுப் பதிப்பாகும்.

அடுத்து, இந் நாடகத்தினை விபரிக்கும் வகையில் ஓரிரு விமர்சனங்களும் உண்டு. அவை பெண் படைப்பாக்கம் தனி ஒரு பெண்மணியின் சித்திரிப்பு மேலும் ஆண்நபர் பெண் பாத்திரம் ஏற்றது சிலருக்கு ஒரு விதமான சிரிப்பை ஏற்படுத்தியது.

அடுத்து இசை இன்னமும் மெருகூட்டப்பட்டிருக்கலாம், பாடல்கள் பாடியவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இன்னமும் இசையை வலுப்படுத்தி இருந்திருக்கலாம் இதற்கு குறுகியகால பயிற்சிகள் மற்றும் துறைசார்ந்த பயிற்சி இன்மை போன்றன காரணமாக இருந்திருக்கும்.

எவ்வாறெனினும் பட்டதாரிபயிலுனர்களின் "புதிய வேலிகள்" நாடகம் வளர்ந்து வரும் எமது சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி புதியதொரு, சிறந்த மாற்றத்தை உண்டுபண்ணும், உண்டுபண்ணி இருக்கின்றது என்பது குறிப்பிட வேண்டியதே.

**மாலினி கிருஸ்ணானந்தன்**

(M.A in Cultural)

**கலாசார அலுவலர்,**

**வலி தென் மேற்கு பிரதேச செயலகம்,**

**சண்டிலிப்பாய்.**

**நாடக வளவாளர் எண்ணத்திலிருந்து...**

**புதிய வேலிகள் - சமூக மாற்றத்துக்கான ஓர் புதிய ஆயுதம்**

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோர். நம்மால் இயன்ற பணிகளை ஆற்றிடுவோம். சும்மா இரோம்' அர்த்தம் மிகுந்த மகாகவியின் வார்த்தைகள் இப்பகுதியில் நினைவுகூற பொருத்தமானதே. புதிய வேலிகள் நாடக உருவாக்கத்தில் பங்குகொண்டமை என்னுள் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

ஓர் நாடகத்தின் வெற்றி என்பது எழுத்துரு, தேர்ச்சியான நடிகர்கள், சிறப்பான நெறியாள்கை, என்ற அம்சங்களைவிட ஈடுபாட்டுடன் கூடிய கூடிக் கருமமாற்றும் மனப்பாங்குடைய நண்பர்களாலேயே சாத்தியமகின்றது.

புதிய வேலிகள் நாடகத்தின் வளர்ச்சியிலும் இதனையே காணலாம். விழிப்புணர்வு சார்ந்த ஓர் நாடக தயாரிப்பில் அதனை அழகியலோடும், அர்த்தம் நிறைந்ததாகவும் மக்களிடம் கொண்டு செல்ல நன்கு பயிற்றப்பட்ட அனுபவம் மிக்க ஆற்றுகையாளர்களாலேயே செய்ய முடியும். ஆனால் புதிய வேலிகள் நாடக ஆற்றுகையாளர்கள் அனேகமானவர்களிற்கு இதுவே முதல் நாடகம் அல்லது அரங்குசார் அனுபவமாக இருப்பினும் அவர்களின் செயல் ஊக்கம் காரணமாக கொடுக்கப்பட்ட பங்கினை பார்த்து, கேட்டு, அவதானித்து, நேர்த்தியாக ஆற்றியுள்ளனர்.

புதிய வேலிகள் நாடகம் ஓர் பரீட்சார்த்த முயற்சியாக கருதலாம். அதே வேளை சமூக செயலாளிகள் கற்றுக் கொள்ளக்கூடிய அம்சங்களும் இதில் இருப்பதைக் காணலாம்.

புதிய வேலிகளின் கதைக்கரு புதியது அல்ல அது சொல்லப்பட்ட முறையும் புதியது அல்ல இருப்பினும் ஆற்றுகையாளருக்கும் அது சார்ந்தவர்களுக்கும் ஓர் புதிய அனுபவத்தை கொடுத்துள்ளது.

'ஆற்றல் மிகு கரங்களில் ஆயுதம் ஏந்துதலே மாற்றத்திற்கான வழி' என்பது ஓர் கவிதை வரி இங்கு ஆயுதம் என்பது வெறும் கொலைக்கருவி அல்ல. சமூகத்தில் காலத்திற்கு காலம் ஏற்படுகின்ற சிக்கல்களை தீர்ப்பதற்கு கலை வடிவங்கள் ஆயுதமாக பயன்பட்டுள்ளது.

"புதிய வேலிகள்" என்கின்ற ஆயுதத்தோடு சிறுவர் துஸ்பிரயோகம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த புறப்பட்டவர்களுக்கு அவ் ஆயுதத்தை இயன்றவரை சரியான முறையில் பயன்படுத்த என் வழிகாட்டல் உதவியிருக்கும் என்று எண்ணுகின்றேன்.

**க.சீலன்**

**தேசிய கலை இலக்கிய பேரவை**

## நிகழ்த்துனர் சார்பாக ...

## நாடக நாட்கள் - ஓர் பட்டறிவுப் பகிர்வு

**என்.தனுசுஜன்,**

பட்டதாரிப் பயிலுநர்,

பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

'எங்கள் பிள்ளைகளே இது உங்கள் கதைகளே....."
நாடகம் துவங்குகிறது........
'எங்கள் பிள்ளைகளே இது உங்கள் கதைகளே....."
நாடகம் நிறைவுறுகிறது.

துவக்கமும் முடிவும் எனது வரிகள் என்பதில் என் தமிழுக்கு மீசை முளைத்து விட்டதாக ஒரு நியாயமான கர்வம் எனக்குள் எப்போதும் இருக்கும்!
பதின் பருவத்தை (Teenage) நிறைவு செய்யாத சிறுவர்கள் செல்லும் சகதிச் சாலைகளால் அவர்களது வாழ்வின் வசந்தம் துர்நாற்றம் வீசுவதை தடுக்கவே இந்த நாடக அரங்கேற்றம் தேவையானதாக இருந்தது.

02.07.2012 அன்று பட்டதாரி பயிலுநர் நியமனம் அரச அதிபர் தலைமையில் கிடைக்கப்பெற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு பணி ஏற்புக்கு வருகிறோம். இது பயிலுனர் பயிற்சிக் காலம். இரண்டாம் வாரம், பயிலுனர்களின் கலந்துரையாடல் நேரத்தில், சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் ஒன்றை உருவாக்கி பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளிலும் அரங்கேற்றப்பட வேண்டும் என்றும், ஆர்வமுள்ள பட்டதாரி பயிலுநர்கள் இந்தக்

கலையைப் படைக்க வேண்டும் என்று பிரதேச செயலர் தலைமையில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கோரிக்கை விடுத்தார்.

நான் நடிகன் அல்லன், நடிப்பு எனக்கு பிடிப்பும் அல்ல. உருவாகவுள்ள நாடகத்துக்கு பாடல் எழுதும் பணிக்கு நண்பன் கலைச்செல்வன் அவர்கள் என்னைப் பணித்தார். நானும் பாடல், எழுதும் பாடலாசிரியனாக மட்டுமே சம்மதித்தேன். எனது பல்கலைக்கழக காலத்தில் பாடல் இசைத்தட்டு ஒன்று வெளியிட்ட அனுபவத்தில் இதற்கும் பாடல் எழுதும் முயற்சிக்கு முன் வந்தேன்.

நாடகத்தை முழுமையாக மணம் செய்வதன் மூலம் தான் சிறந்த பாடல்க் குழந்தை பிறக்கும், ஆதலால் நாடகம் முழுவதையும் உள்வாங்க நாடகத்தைப் பல தடவை பார்த்துக் கொண்டிருந்தேன். நாடகத் துளிர்ப்பு நேரங்களில் நடிகர்கள் சிலர் இடைவிலகல் செய்ததால் ஆளணிப்பற்றாக்குறை வந்து நாடகம் குறையுயிராய்க் கிடந்தது. இந்த நேரத்தில் பார்வையாளனாக இருந்த ஒரு பாடலாசிரியரை கலைச்செல்வன் வைத்தியராக்கினார். ஆதலால் "புதிய வேலிகள்" என்ற இந்த நாடகத்தில் எனக்கு இரண்டு பங்களிப்புக்கள். ஒன்று பாடலாசிரியர் மற்றையது வைத்தியர் பாத்திரம்.

நாடகத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் எங்கள் பிள்ளைகளே இது உங்கள் கதைகளே....." என்று எனது பாடல் ஒலிக்கும். சாவகச்சேரியில் ஓரிடத்தில் பார்த்தேன், ஒரு பள்ளி மாணவி நாடகத்தின் துவக்கத்தில் வரும் பாடலை அப்படியே மனதில் பதித்து நாடகம் முடியும்

போது மீண்டும் அந்தப் பாடல் ஒலிக்கும் நேரம் தானும் சேர்ந்து அந்தப் பாடலைப் பாடியதை நான் கண்டேன், உடனே என் ஒளிப்பதிவுக் கருவிக்குள் அந்தக் காட்சியை சாட்சியாக பதிந்து விட்டேன். என் பாடல் பல மாணவர்களின் நெஞ்சைத் தொட்டது என்பதில் எல்லை தொட முடியாத சந்தோசம் எனக்கு.

கால மாற்றம் என்னும் சூறாவளியில் சிக்கி நம் தேசம் நாசமாகத் தொடங்கியதில் சில பேய்களும் உருவாகிவிட்டன. மாறிவரும் இந்த விஞ்ஞான வீதியில் பல பிள்ளைகளின் பாதங்கள் பிழையாகிப் போகின்றன. FaceBook, Orkut, Twitter முதலான சமூக வலைத்தளப் பயன்பாடும், ஏனைய இணையவழி உலாவல்களும், கைத்தொலைபேசியின் தவறான உபயோகங்களும் மது மற்றும் உற்சாகமூட்டும் சக்தி மிகு பானங்களின் (Energy Drinks) சுவைக்கு அடிமையாவதும், சிறுவயதில் புகைத்தலும் போதையூட்டும் பொருட்களை உண்டு உற்சாகப்படுதலும், விஞ்ஞான வேளாண்மையால் விளைந்த ஏனைய பொருட்களின் கீழ்த்தன உபயோகங்களும் மற்றும் ஆபாசத் தேடலும்- பகிர்தலும் சிறுவர்களின் கல்வியை பாதித்து இளமைக்காலத்தை கருக்கி எதிர்காலத்தை இறந்தகாலமாக்கி விடுகின்றன. மேலைத்தேச நாடுகளின் தொடர்பை இன்று நம் மேசைக்கு ஒரு நொடிப் பொழுதில் கொண்டு வந்துவிடும் வசதிகளும் வாய்ப்புகளும் வந்துள்ளதால் நம் சமுதாயம் மனிதகுல நேசத்தை இழந்து வன்முறை வாசலுக்குப் போய்க்கொண்டிருக்கின்றது. இதனால் சிறுவர் துஸ்பிரயோகம் மலிந்து விட்டது. சிறுவர்களை சதை நேசத்தோடு சுரண்டிச் சுகம் காணுதல், பள்ளி செல்லும் பசுமையான பொழுதுகளை மறந்து சிறுவயதில்

தொழிலுக்கு ஆட்படுத்துதல், சிறுவர்களை கடத்தி அங்கங்களை விலை பேசி விற்றல், போதைப் பழக்கங்களை போதித்தல் இவ்வாறு பிஞ்சுத் தோலை உரித்து நஞ்சுத் தோலை போர்த்தி விடுகிறது இன்றைய நாகரிகமாற்றம். இவைகளை உள்வாங்கி நாங்கள் எல்லோரும் நாடகத்தை கூட்டாக உருவாக்கினோம். இந்த நேரங்களில் இந்த நாடகம் பல தடவைகள் செத்துப்பிழைத்தது.

நானும் நண்பன் கலைச்செல்வனும் ஆரம்பத்தில் இளவாலையில ஓர் இசை அமைப்பாளரையும் பின்னர் சுண்டிக்குழியில் இன்னொருவரையும் கண்டு சந்தித்து ஒழுங்கமைத்தோம், இருந்தும் பயனளிக்கவில்லை. நாடகக் கதைகளை ஆளாளுக்கு நாங்களே எழுதி நெறியாள்கை செய்து வந்தோம். ஒரு கட்டத்தில் முக்கிய பாத்திரமொன்றின் முறிப்பால் நாடகம் தன் முதுகெலும்பை இழந்து மூச்சை விடுவது போல் பேச்சிழந்து கிடந்தது. பழகி வந்த நடிகை ஒருவர் விலகி விட்டதில் சூடேறினேன். நான் சொன்னேன் 'பிரிந்து செல்பவர்களை நினைத்து வருந்த வேண்டாம், ஒருவர் மிஞ்சினால் கூட தனி நபர் நாடகம் நடக்க வேண்டும்' என்று கோபத்திலும் உற்சாகம் பேசினேன். பின்னர் நண்பன் வின்சன் அவர்கள் கிளை தாங்கும் விழுதானார், நாமெல்லோரும் மரம் தாங்கி உரமேறினோம். பின்னாளில், விலகிக் கொண்டவர் எங்கள் நாடக வெற்றி கண்டு வியர்துப் போனதாக அறிந்து கொண்டோம். இந்நிலையில் மேலான மேற்பார்வை ஒன்று நன்றென்று பட்டது. அடுத்தடுத்து இருவரின் பின்னர் மூன்றாமவர் வந்தார். தண்ணீரும் மூன்று முறை தான் பொறுக்கும் என்பார்கள். எங்கள் நாடகமும் மூன்றாவது முறையோடு தப்பிப்

பிழைத்து விட்டது. சீலன் ஆசிரியர் அவர்கள் சிக்கினார். நாங்கள் பழகி வந்த நாடகத்திலிருந்த பல சிக்கல்களுக்கு சிக்கெடுத்த பெருமை சீலன் ஆசிரியரையே சேரும். புல்லாங்குழலில் எளிதில் நுழைந்து விடும் காற்றுப் போல் எல்லோர் மனதிலும் நுழைந்துவிட்டார். மிகவும் மென்மையான பல்கலைஞனாக எமக்கு அறிமுகமானார். யோசேப் மேரி என்ற முதல் மேற்பார்வையாளரின் வழிகாட்டலில் நானும் கலைச்செல்வனும் மிகவும் சிரமப்பட்டு சீலன் ஆசிரியரை சிக்க வைத்தோம். அவர் தான் இந் நாடகத்தை தக்க வைத்தார். பாடலின் இசை அமைப்பும், ஆர்மோனியம் மற்றும் பறை வாத்திய வாசிப்பும், நெறியாள்கை மேற்பார்வையும் ஒப்பனையையும் (Makeup) சீலன் ஆசிரியர் அவர்களே சிறப்பாக செய்து வந்தார். இவர் மேலாண்மை செய்யாமல் விட்டிருந்தால் இந்த நாடகம், ஒரு மேடை கூட ஏறியிருக்காது, ஒரு மேடை ஏறினால் கூட முதலாவது மேடை ஏற்றத்துடன் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி காயப்பட்டிருந்திருக்கும். சீலன் ஆசிரியரும் சில வசனங்கள் எழுதியிருந்தார் நானும் சில வசனங்கள் எழுதினேன். வைத்தியர் பாத்திரத்திற்குரிய வசனங்களை எழுத முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொழில் புரியும் வைத்தியர் நண்பன் வின்சனின் அண்ணாவை தொடர்பு கொண்டு போதைப் பாவனையால் ஏற்படும் நோய்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி விளக்கம் கேட்டறிந்த பின்னர் தான் என் சொந்தச் சிந்தனையும் கலந்து எழுதினேன். “எம்மிடமுள்ள ஓர் ஒற்றை உயிரும் ஒரே ஒரு முறை வாழப் போகும் இந்த வாழ்வும் விலை மதிக்க முடியாதவை. ஆதலால் நாமெல்லோரும் ஆரோக்கியமாக வாழ்வதே நன்று'' என்று நிறைவில் நான் சொல்லும் போது நிஜத்தில் என்

உதடுகள் உச்சரிப்பதாக நினைப்பதில்லை. சீரழிந்து வரும் சில சிறுவர்களுக்கு என் ஆத்மாவின் அறைகூவலாகவே அதைக் கருதுகின்றேன். நாடகத்தின் ஆரம்பத்தில் வரும் ஆரம்ப உரையயையும் நானே எழுதியது இந்த நாடக நாட்களில் எனக்கு மகிழ்வைத் தருகின்றது.

எல்லாப் பாடசாலைகளிலும் சந்தோசமாக நாடக ஆற்றுகை செய்தோம். குழுவாக சேர்ந்து சென்று நாடக ஆற்றுகை செய்வதில் குதுூகலமும் ஆனந்தமும் அடைந்தோம். மாணவர்களாக இருக்கும் சிறுவர்கள், சீரழிந்து போய்விடக்கூடாது என்பதற்காக பாடசாலைகளில் ஆற்றுகைகள் செய்த நாம், மாணவ நிலையை விட்டு பாடசாலை செல்லாமல் கிராமங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத சிறுவர்கள் விழிப்புணர்வடைந்து பள்ளிக்குத் திரும்ப வேண்டும் என்பதற்காகவும் பொறுப்புள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர் தம் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து நிகழ்காலத்தில் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் கிராமங்களிலும் அரங்கேற்றி வருகின்றோம். ஒரு நாடகம் முடித்து அலுவலகம் திரும்பும் நேரத்துக்குள் அடுத்த நாடகத்துக்கான அழைப்பு எங்கோ ஒரு இடத்திலிருந்து வந்துவிடும். இதன் வெற்றிக்கு வித்திட்ட பிரதேச செயலர் திரு சு.முரளிதரன், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி பி.சத்தியவதனி அவர்களும் இந்த வித்துக்கு நீர் வார்த்த என் நண்பர்களும், பட்டதாரி பயிலுநர்களின் பயிற்சி நெறிக்காலத்தில் மேலதிக மகிழ்ச்சியை தந்தார்கள்.

இந்த நாடகம் பல சிறுவர்களின் சிந்தையைத் தொட்டு சேதி சொல்லியிருக்கும், இன்னும் பல சிறுவர்களுக்கு தமது உரிமை குறித்து பாதுகாப்பு முன்னெச்செரிக்கை செய்திருக்கும். ஆசிரியர்கள் பலர் தங்கள் ஏட்டுக் கல்வியால் எடுத்துரைத்தும் செய்ய முடியாததை உங்கள் கூட்டு முயற்சியால் இன்றைய அவசர தேவை கருதி செயற்பட்டது மிக்க நன்று என்று தம் மெய் சிலிர்த்து சொன்னார்கள்.

இத்தோடு இந்த நாடக நாட்களில் நாங்கள் மக்களுக்கான சமூக சேவைகள் மற்றும் தரப்பட்ட தகவல் திரட்டுக்களைப் பெறத் தவறவில்லை. பொது மக்களின் சேவைகளான பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகள், ஆள் அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கும் பணி முதலான எங்கள் நியமனச் சேவைகளை செவ்வனே செய்து வந்தோம். மேலதிக நேரங்களில் தான் நாடகங்கள் பழகினோம். கடமை புறந்தள்ளி நாடகம் பழகியதில்லை.

UNDP நிறுவனம் இந்நாடகத்துக்கு தேவையான நிதியுதவிகளைச் செய்து எங்களையும் ஊக்குவித்து சமுகத்தையும் காத்து வருகின்றது. அந்தக் கடடைமயாளர்களை என் கண்ணில் வைத்துக் கொண்டேன் இந்நாட்களில்.

நல்ல நண்பர்களின் சேர்க்கை துணையாகவும் மகிழ்ச்சியாகவும் எமக்கு கிடைத்தன. ஓங்காரரூபன், கலைச்செல்வன், பிரதீபன், சுபாஸ்கரன், றஞ்சித்றாஜ், ஜோன்சாக்சன், வின்சன், சீலன், ஞானசந்திரன், சேந்தன்,

தபோதினி, யாழினி, நிஜந்தினி, கல்யாணி முதலானவர்களின் நட்பும் நிழலும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. ஆக மொத்தம் வேலை நாட்களையும் சோலை நாட்களாக்கியது இந்த நாடக நாட்கள். நாம் வாழும் மொத்த நாட்களில் ஓர் அர்த்தப் பசுமையான நாட்களே இந்த நாடக நாட்கள்.

## விழிப்புணர்வை வழங்கும் "புதிய வேலிகள்" ...

எமது சமூகம் கட்டுப்பாடுகள், விழுமியங்கள், நியமங்கள், கலை, கலாசாரம் பண்பாட்டு அம்சங்களைக் கொண்டது. ஆனால் அது இன்று பல்வேறுபட்ட காரணங்களினால் சீரழிக்கப்பட்டு சின்னாபின்னமாகிக் கொண்டு வருகின்றது (புதியதின் தாக்கம் பழமையை அழித்துவிடக் கூடாது பழமையை பாதுகாத்து புதுமை படைக்க வேண்டும்) நவீனயுகத்தில் மனித வாழ்வியல் கோலத்தில் பல சிக்கல்களை எதிர் கொள்கிறார்கள். இந்த வகையில் சிறுவர்களும் பல பிரச்சனைகளை எதிர் கொள்ளுகின்றனர்.

சிறுவர் பருவம் என்பது 5-14 வரையானது ஆகும் சிறுவர்கள் சரியான முறையில் வழிப்படுத்தபட வேண்டும் இல்லையேல் எமது சமூகம் சீர் கெட்ட சமுதாயத்தை உருவாக்கிவிடும் இந்தவகையில் அக்கறை கொண்ட எமது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு.சு.முரளிதரன் மற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி பி.சத்தியவதனி மற்றும் 10 பட்டதாரி பயிலுனர்கள் ஒன்றிணைந்த UNDP நிறுவனத்தின் அனுசரணையுடன் இணைந்து **"புதிய வேலிகள்"** எனும் விழிப்புணர்வு நாடகத்தை அரங்கேற்றியுள்ளோம்.

இந்நாடகம் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பானதாக உள்ளது. இந்நாடகத்தின் மூலம் சிறுவர்கள் கவனிக்கப்படவேண்டியவர்கள் என்பதனை மிகவும் தெளிவாகவும் உணர்வு பூர்வமாவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இன்று எமது சமூகத்து சிறுவர்கள் பெற்றோரின் கவனக்குறைவு, பொருளாதாரப் பிரச்சினை, பலவீனம், சிறுவர்களின் அறியாமை, பொற்றோரின் விவாகரத்து, பெற்றோரின் வெளிநாட்டு பயணம், போதைக்கு அடிமையாதல், தனிமைப்படுத்தப்படல் போன்றவற்றால் துஸ்பிரயோகம் இடம் பெறுகிறது. சிறுவர்கள் நாட்டின் கண்கள், தூண்கள் என போற்றும் அதே சமூகத்திடமிருந்து அவர்களை பாதாள உலகத்திற்கு அழைத்து நாசமாக்குகிறது.

இன்று பெற்றோர்கள் தமது சுயதேவை மற்றும் அக்கறையின்மை காரணமாக பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இதனால் பிள்ளைகள் உள ரீதியாகவும் மற்றும் உடல் ரீதியாகவும் தாக்கப்படுகின்றார்கள். பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்படுகிறார்கள். மற்றும் நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் சிறுவர்கள் மதுபாவனைக்கு அடிமையாதல் இதனால் பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு தமது வாழ்வை சீரழித்துக் கொள்கின்றார்கள் என்பதனையும் இந்நாடகத்தின் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளோம். மேலும் நவீனத்தின் தாக்கம் மிகவும் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

Face book, Phone மற்றும் Internet போன்ற நவீன தொலைத்தொடர்பு முறைகளாலும் சிறுவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனையும் இந்த "**புதியவேலிகள்**" எனும் நாடகம் வெளிப்படுத்தி நிற்கிறது. தொடர்பாடல் சாதனங்கள் உண்மையில் அதன் தேவைக்கும், நோக்கங்களுக்கும் ஏற்ப பயன்படுத்தப்படவேண்டும். அதனை தவறான

பயன்பாட்டிற்கு உட்படுத்திவிடக் கூடாது. என்பதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் இத் தொலைத்தொடர்பு சாதனங்கள் பற்றிய சரியான அறிவை வழங்கவேண்டும் என்ற நோக்கிலும் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நாடகத்தில் எல்லா நடிகர்களும் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தி சிறுவர்களை துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்து அதிலிருந்து சீரான வாழ்கையை வாழ்வதற்கான விழிப்புணர்வை சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளோம். நாடகமானது ஆடலும் பாடலும் கலந்து வருவதனால் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இதற்கு இசையமைப்பு மெருகூட்டிள்ளது.

நாங்கள் என்ன நோக்கத்திற்காக இந்த நாடகத்தை ஆரம்பித்தோமோ அந்த எண்ணம் நிறைவேறியுள்ளது, நிறைவேறியிருக்கும் என எண்ணுவதோடு, இதற்கு ஒத்துழைப்பு தந்த அனைத்து கலைஞர்களுக்கும், ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**க. ஓங்காரரூபன்.**

## நெகிழ வைக்கும் "புதிய வேலிகள்"...

சமூக அக்கறை கொண்டவர்கள் ஒருங்கிணைந்து உருவாக்கிய இந் நாடகம் துடிப்புடனும் மிகுந்த வரவேற்புடனும் செயற்படும் போது இந் நாடகத்தில் நானும் ஒரு பாத்திரத்தை ஏற்று பங்குபற்றியமைக்காக பெருமையடைகின்றேன்.

'புதிய வேலிகள்' நாடகம் நான் கல்வி கற்ற பாடசாலையான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆற்றுகை செய்யப்பட்ட போது பெற்ற வரவேற்பும், கிடைத்த பாராட்டும் எனக்கு மகிழ்வையும், கௌரவத்தையும் கொடுத்தன. அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் என அனைவரும் நாடகம், நடிகர்கள் சார்ந்து மிகவும் பெருமைப்படக் கூடிய வகையில் வாழ்த்திய தன்மையை இன்றும் நினைத்து நான் மகிழ்வதுண்டு.

பாடசாலை ரீதியாகவும், கிராம மட்டங்களிலும், பிரதேச சபை, பிரதேச செயலகம் போன்றவற்றில் ஆற்றுகைகள் இடம்பெறுகின்ற போதும், குறித்த பார்வையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற எதிர்வினைகள் நாடகத்தின் வெற்றியை, அதன் இலக்கை உயர்வடையச் செய்த தன்மையே பறைசாற்றி நிற்கின்றது.

அந்த வகையில், "புதிய வேலிகள்" சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கு எதிரான விழிப்புணர்வு ஆற்றுகையில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், இந் நாடகத்தில் நானும் ஒரு அங்கமாக வாழ்ந்துள்ளேன், வாழ்ந்து வருகின்றேன் என நினைக்கையில் மனதிற்கு புத்துணர்ச்சியையும், திருப்தியையும் தருகின்றன.

**மா.சுபாஸ்கரன்**

## நன்றியோடு "புதிய வேலிகள்"

யாழ்ப்பாணச் சமூகம் எதிர்நோக்கும் சமகால அச்சுறுத்தலில் சிறுவர் துஸ்பிரயோகமே முக்கிய இடத்தைப் பெற்று நிற்கிறது. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும், கல்வியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் அதிக அக்கறைப்பாட்டுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் வெளிப்படையாகவே காணக் கூடியதாகவுள்ளது. சிறுவர் துஸ்பிரயோகத்திற்கான விழிப்புணர்வை நேரடியாகவே பாதிப்பிற்கு உள்ளாகும் சிறுவர் குழுக்களான மாணவர்களுக்கு மிகச்சரியாக வழங்கப்படுவதன் மூலம் ஓர் தெளிவுடைய சிறுவர் சமுதாயத்தை உருவாக்கி துஸ்பிரயோகத்தை ஓரளவேனும் குறைக்கலாம் என்ற இன்றைய தேவையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் அவர்களின் ஆலோசனையுடனும் சிறுவர் உரிமைகள் மற்றும் மேம்பாட்டு உத்தியோகத்தர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழும் பட்டதாரிப் பயிலுனர்களினால் செயல் வடிவம் கொடுக்கப்பட்ட ஓர் அரங்க ஆற்றுகையே "**புதியவேலிகள்**" எனும் சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நாடகமாகும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களை இலக்கு குழுக்களாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந் நாடகமானது மாணவர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றிருப்பது

மிகவும் மகிழ்ச்சிகரமானதே. பல பொது இடங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் நான் சந்தித்துக்கொண்ட (தமது பாடசாலைகளில் நாடகத்தைக் கண்டு களித்தவர்கள்) மாணவர்களில் அநேகர் இந் நாடகம் தொடர்பாக உரையாடுவதிலும், அதில் இடம்பெறும் பாடல்கள், வசனங்களை மனனம் செய்து சொல்வதும், இந் நாடகத்தை அப்படியே முழுமையாக தமது சமூக மட்ட நிகழ்வுகளில் மேடையேற்றி இருப்பதும் அவர்கள் மத்தியில் இந் நாடகம் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தையே எடுத்துக் காட்டுகிறது. அது மட்டுமல்லாமல் உயர் அதிகாரிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் தமது பாராட்டையும் ஆதரவையும் எமக்குத் தந்திருந்தனர். இன்னும் யாழ்ப்பாணத்தின் பத்திரிகைகள் அனைத்துமே தம் நாளாந்த செய்திகளில் ஒன்றாக இந் நாடகம் தொடர்பான தகவல்களை வெளியிட்டு பாராட்டியமையும் இங்கு சுட்டிக் காட்டலாம். எனவே இவை அனைத்தையும் ஒன்று சேர நோக்கும் போது உண்மையிலேயே சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிராக புதிதாக போடப்பட்டிருக்கும் ஓர் வேலியாகவே இந் நாடகம் அமைந்துள்ளமை தெளிவாகின்றது.

இந் நாடகத்தில் ஈடுபட்ட என் நண்பர்கள் அனைவருமே தமது தனிப்பட்ட, குடும்ப வேலைகளுக்கு அப்பாற்பட்டு சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணியின் பொறுப்பை உணர்ந்து செயற்பட்டமையை என்னால் பல இடங்களில் வெளிப்படையாகவே அவதானிக்க முடிந்தது. எமது நாடகக் குழுவில் உள்ள ஓரிருவரைத் தவிர

ஏனையவர்கள் நாடகம் தொடர்பான அடிப்படை அனுபவத்தைக் கூட பெற்றிராதவர்கள். இப்படிப்பட்டவர்களால் ஓர் சிறப்பான கலையை படைக்க முடிந்திருப்பது அவர்கள் சமூகத்தின் பால் கொண்டிருந்த அக்கறையேயன்றி வேறெதுவும் இல்லை.

பலரது அழைப்புக்களை நாளுக்குநாள் பெற்று தொடர்ச்சியான ஆற்றுகைக்குரியதாக இந் நாடகம் மாற்றப்பட்டமைக்கு பலரது அயராத உழைப்பும், பங்களிப்புமே முக்கிய காரணமாயிற்று. அந்தவகையில் இந் நாடகத்தின் தொடக்கம் முதல் இன்றுவரை அதன் அனைத்துத் தேவைகளையும் தனது பெரும் பணியின் மத்தியிலும் நிறைவேற்றி இச் செயற்பாட்டிற்காகவே எம் அனைவரையும் எல்லாப் பணியிலிருந்தும் முழுமையாகவே விடுவித்து, இதனை ஓர் முக்கிய செயற்பாடாகக் கருதி எமக்கருகில் இருந்து எம்மை வழிநடாத்தி வரும் எம் பிரதேச செயலர் திரு.சு.முரளிதரன் அவர்களுக்கு எம் நாடகக் குழுவினர் சார்பாக நன்றி கூறுவதில் நாம் மகிழ்வடைகின்றோம்.

நாடகம் தொடர்பான நிதியை கையாளுதல், எமதுதேவைகள், பிரச்சினைகள், ஆலோசனைகள் போன்றவற்றிற்காக ஒருநாளுக்கு பலமுறை சென்ற போதும் இன்முகத்தோடும், அக்கறையோடும் எம்மை அணுகி,எமக்குரிய சரியான வழிகாட்டலை வழங்கி, வெற்றிக்குப் பங்காற்றிய எமது பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் அவர்களுக்கும், கணக்காளர் அவர்களுக்கும் நாம் நன்றி கூறுவதில் மிகவும்

பொருத்தமானவர்கள். அத்தோடு நாடக உருவாக்கம் முதல் முழு ஈடுபாட்டோடு கடினமாக உழைத்து எம்மோடு இருந்து எம் சிறு தேவைகளைக் கூட நிறைவேற்றி ஒருதாய் போல் வழிநடாத்தி வரும் சிறுவர் உரிமைகள் மற்றும் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. P. சத்தியவதனி அவர்களுக்கும், அவரோடு பக்கபலமாய் இருந்து பணியாற்றிய கலாச்சார உத்தியோகத்தர் திருமதி மாலினி அவர்களுக்கும், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கௌரி அவர்களுக்கும் எமது நன்றிகள். சிதறிக் கிடந்த எம் சிந்தனைகளை ஒன்றுபடுத்தி சிறந்த ஒரு படைப்பை வழங்க பெரிதும் துணை நின்றவர் எமது நாடக நெறியாளர் திரு.க.சீலன். இவர் நாடக நெறியாளராக மட்டுமன்றி ஒரு இசையமைப்பாளராக, ஒப்பனையாளராக இருந்து எம் நாடகத்திற்கு வலுச்சேர்த்துள்ளார். அவரையும் நன்றியோடு பாராட்டுகின்றோம். அடுத்து இசைக்கலைஞனாக எம்மோடு இணைந்து பணியாற்றிய ஞானச்சந்திரன் அண்ணா அவருக்கும் பயணங்களிலும், அரங்க ஆயத்தப்படுத்தலிலும் எமக்கு துணை புரிந்த சேந்தன் அண்ணாவையும் நன்றியோடு பாராட்டுகின்றோம். இந்த நாடகத்தின் எல்லையை விரிவுபடுத்தி அதன் தேவைகளை நிறைவேற்றியவர்கள் UNDP நிறுவனத்தினர். நாடக ஒத்திகையைப் பார்த்து அது தொடர்பான விமர்சனங்களை தந்து மெருகேற்றிய UNDP நிறுவனத்தின் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் இணைப்பாளர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றோம். நாடகத்திற்கான ஆடையையும் அதற்கான வடிவமைப்பிற்கான நிதி வசதிகளையும் வழங்கிய சமூக

ஆர்வலரான திரு T.சிறிதரன் அவர்களையும் நன்றியோடு நினைவு கூறுகின்றோம். இன்னும் இந் நாடகத்திற்கு பலவழிகளில் பங்காற்றியவர்கள் அனைவருக்கும்,

இவ் ஆவணப்படுத்தலை மேற்கொண்டு வருகின்ற செல்வி.யோ.யாழினி அவர்களுக்கும் எம் குழுவினர் சார்பில் நன்றிகள் கூறுவதில் நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

நன்றி

- **S. கலைச்செல்வன்** -

## பார்ப்போர் உள்ளங்களிலிருந்து......

### காலத்தின் தேவை – 'புதிய வேலிகள்'

சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'புதிய வேலிகள்' எனும் ஆற்றுகையை வழங்கி வருகின்றனர். தற்காலத் தேவை கருதி நிகழ்த்தப்படும் இவ்வாற்றுகையானது பெரியவர்கள் சிறுவர் உரிமைகளைப் பேண வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக மட்டும் நின்றுவிடாது சிறுவர்கள் தம் உரிமைகள் என்ன? அவற்றை பேணுவதன் மூலம் தம்மைத் தாமே எவ்வாறு பாதுகாக்க முடியும்? என்பதை சிறுவர்களுக்கு சொல்வதாக அமைகிறது. சிறுவர்களுக்கு புரியும் விதத்தில் மிகவும் எளிமையாகவும் மகிழ்ச்சியினூடாகவும் வெளிப்படுத்தப்பட்டு நிற்கிறது. சிறுவர்களின் உரிமைகள் மட்டுமல்ல அவர்களது கடமைகளையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இன்றைய யதார்த்த நிலையில் காணப்படும் விடயங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கு மட்டுமல்லாது பெரியவர்களையும் சென்றடையும் வகையில் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் ஆற்றுகைகள் நிகழ்த்தப்படுமாயின் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியும். இதே போன்று மேலும் பல

விடயங்களை உள்ளடக்கியதாக ஆற்றுகைகள் உருவாக்கப்பட்டு மேடையேற்றப்படுவதன் மூலம் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். எனவே தொடர்க உம் பணி வெல்க உமது இலக்கு என வாழ்த்துகின்றேன்.

**திருமதி. செ. ஏ. பீரிஸ்**

**யா / பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. த. க. பாடசாலை**

## என் மனதைத் தொட்ட "புதிய வேலிகள்" ...

இந் நாடகமானது எமது சமூகத்தினர் என்று கூறுவதிலும் பார்க்க எமது இளம் சமூகத்தினர் மத்தியில் ஓர் சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

அது மட்டுமல்லாது நாம் தெளிவின்மையால் தவறிழைக்கின்றோம் என்பது பற்றியும் சிறுவர் துஸ்பிரயோகம் என்றால் என்ன அதிலிருந்து நாம் எவ்வாறு பாதுகாக்கப்படவேண்டும் என்பது பற்றியும் முக்கியமாக பெற்றோர் பிள்ளைகளிடத்தில் கண்கானிப்புடன் இருக்கவேண்டும் என்பது பற்றியும் இந்நாடகத்தின் மூலம் தெளிவாக எடுத்து காட்டினீர்கள்.

இந் நாடகம் பாடசாலைகளில் நடாத்தப்படுவது மிக பொருத்தமானதாக அமைகின்றது.

நன்றி

**மாணவி - மேரி நிசாலினி**

**யா / மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலயம்**

# நிகழ்த்துகை தொடர்பாக பத்திரிகை குறிப்புகள் மற்றும் ஒளிப்படங்கள்

**11. 10. 2012 - தினக்குரல்**



உலக உள நாளை முன்னிட்டு உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நடைபெற்ற உலக உளநாள் நிகழ்வில் 'முகங்கள்' கையெழுத்துப் பிரதியை மாணவர் வழிகாட்டல் ஆலோசனைப் பொறுப்பாளர் திருமதி ஜெ. புத்திரசிகாமணியிடமிருந்து வைத்திய கலாநிதி என் யோகேஸ்வரன் பெற்றுக் கொள்வதையும், ஆக்கங்களை வழங்கிய மாணவி ஒருவருக்கு அதிபர் கு. திலீபன் பரிசில் வழங்குவதையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் 'விடியலைத் தேடி' நாடகம் நடைபெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் - 20)

தினக்குரல் - 11/10/2012

**13. 10. 2012 – உதயன்**

## விழிப்புணர்வை ஊட்டும் அரங்காற்றுகை



நவாலி, ஒக்.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பட்டதாரி பயிலுநர்கள் நடத்திவரும் ''விடியலைத் தேடி'' என்னும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நாடகம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் கடந்த முதலாம் திகதி நடத்திய சர்வதேச சிறுவர் தின விழாவில் முதற் தடவையாக இந்த நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சத்தியவதனியின் வழிகாட்டலில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் தற்பொழுது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறும் முதியோர் தின விழாக்கள், பாடசாலையில் இடம்பெறும் சிறுவர் தின விழாக்கள் ஆகியவற்றுக்கு அழைக்கப்படுகின்றது.

இதற்கமைய இவர்கள் இதுவரை 8 ஆவது மேடையேறியுள்ளதாகவும் தொடர்ந்து சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகள் பல அழைப்பு விடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (3-100)

**பத்திரிகையில் இடம்பெற்ற நாடகப் பெயர் மாற்றம் தவறுதலாக இடம்பெற்றது.**

27. 10. 2012 – உதயன்

# விழிப்புணர்வு நடவடிக்கையில் பட்டதாரிப் பயிலுநர்கள்

வலி.தென்மேற்கு.ஒக்.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரி பயிலுநர்கள் அரச கடமைக்கு மேலாக சமூக விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதில் 10 பட்டதாரிகள் பங்கு பற்றுகின்றனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் ஏற்பாட்டில் இந்த பட்டதாரி பயிலுநர்கள் முன்மாதிரியான சமூக நாடகங்களின் ஊடாக சமூகங்களிடையேயும் மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

கலாசாரச் சீரழிவுகளாக கொள்ளப்படும் மதுபோதை, கைத்தொலைபேசி பாவனை, வன்புணர்வு உள்ளிட்ட கருத்துக்களை மையமாக வைத்தே பாடசாலைகள் ஊடாக இந்தச் சமூக நாடகங்கள் முன்வைக்கப்படுகின்றன. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பாடசாலைகளிலும் குறித்த நாடகங்களை மேடையேற்றலாம் என்று கூறப்பட்டது. (ம-50)

11. 10. 2012 – உதயன்

# மாணவர்களின் உள்ளம் பாதிக்காதவாறு கல்விச் சமூகம் சேவையாற்ற வேண்டும்

## உள நலவைத்தியர் பரமேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.11

மாணவர்களின் உளம் பாதிக்கப்படாத வகையில் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டிய தார்மீக கடமை கல்விச் சமூகத்தின் கைகளில் உள்ளது.

மாணவர்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் ஆசிரியர்களே என யாழ்.போதனா வைத்தியசாலையின் உளநல வைத்தியர் பரமேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். யாழ்ப்பாண கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் உலக உளநல நாள் நிகழ்வு நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

நோய்வருமுன்னர் காப்பதே சமூகத்தின் கடமையாக உள்ளது. குறிப்பாக உளத்தை நலமாக பேண வேண்டும். எந்த வொரு மனிதன் தனது செயற்பாட்டை வினைத்திறனாகவும், தனக்கும் மற்றவர்களுக்கும் கெடுதல் இல்லாமலும் சமூகத்துக்கு உதவியாகவும் வாழ்கின்றானோ அவன் உளநலத்துடன் இருப்பதாக கருதமுடியும். மனிதன் ஆரோக்கியமாக இருப்பதற்கு உளம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் உள ரீதியாக பாதிப்படைந்தால் கல்வியில் சராசரி நிலையை எட்ட முடியாது. இது தொடர்பில் நாம் அவதானிப்புடன் செயற்பட்டு பிரதேச ரீதியாக உள்ள உளநல சிகிச்சை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்-என்றார்.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் மகிழ்ச்சிகரன் தயாரித்து வழங்கிய "மறைக்காமல்" எனும் உளநோய் தாக்கத்தின் மூடநம்பிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு குறும் படம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் பாதுகாப்பிரிவினரின் "புதிய வேலிகள்" எனும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் மற்றும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

"விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம்" எனும் தொனிப் பொருளில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் கண்காட்சியும் இடம் பெற்றது.



தென்மராட்சி நிருபர்

சர்வதேச உளநல தின நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்றன. சுகாதார வைத்திய அதிகாரி தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உளநலப் பிரிவு வைத்திய அதிகாரி விமலகாந்தன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், தென்மராட்சி பிரதேச செயலர் சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி மா.மயூரன், சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர் திருமதி வ.கௌரிதரன் பிரதேச உளநல பிரிவு ஆலோசகர் ரி.சி.தவசிரோஜன், உளநல பிரிவு ஆசிரிய ஆலோசகர் ரி.சிவானந்தம், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் மு.இரவிச்சந்திரன் உட்பட பலர் உரையாற்றினர்.

பிரதேச வெளிக்கள உத்தியோகத்தர்கள் உளநல மேம்பாடு தொடர்பான சேவைகளை மக்களுக்கு வழங்குவோம் என்று இதில் உறுதி பூண்டனர். (ம-9-14)

**04. 11. 2012 – உதயன்**

# துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள் சிறுவர்கள்

## இது வரவேற்புக்குரியது என்கிறார் யாழ்.அரச அதிபர்

யாழ்ப்பாணம்,நவ.4

அண்மைக்காலமாக சிறுவர்களுக்கெதிராக இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் சமூகத்தில் வெளிக் கொணரப்படுகின்றன. இவற்றுக்கு காரணம் சிறுவர்கள் விழிப்படைந்து தமது உரிமைகளுக்கு குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள் எனத் தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

யாழ்.மாவட்ட செயலகத்தின் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு அலுவலகத்தின் ஏற்பாட்டில் "சிறுவர் உலகம் சிறுவருக்கே" எனும் தலைப்பிலான சிறுவர் தின நிகழ்வு நேற்று சனிக்கிழமை நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்களை கௌரவிக்கும் வகையில் கடந்த பல வருடங்களாக சிறுவர் தின நிகழ்வுகள் கொண்டாடப் படுகின்றன. இவற்றுக்கு முக்கிய காரணம் சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், சிறுவர்கள் தகுந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பவையே.



இந்த நிகழ்வுகள் மூலம் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் குறிப்பாக விழிப்புணர்வு நாடகங்கள் போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். தொடர்ச்சியாகப் பல்வேறு கருத்துரைகள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் விழிப்புணர்வு நாடகங்களை சிறுவர்கள் மத்தியில் நடத்தும் போது அவற்றை அவர்கள் ஆர்வத்தோடு அவதானிப்பார்கள்.

அண்மைக்காலமாக சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் வெளிக் கொணரப்படுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகங்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கொடுக்கப்படுவதுடன் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். சிறுவர்கள் விழிப்படைந்துள்ளமையே இவற்றுக்கு காரணம்.

சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை மட்டுமல்லாது, அரசும் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. - என்றார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பட்டதாரிப் பயிலுநர்களால் 30க்கு மேற்பட்ட பாடசாலைகளில் மேடையேற்றப்பட்ட "புதிய வேலிகள்" வீதி நாடகமும், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-14)

# நாடக ஆற்றுகைக் குழுவினர்





















தனனன்னத் தானானனா - தனனன

தனனன்னத் தானானனா - (2)

எங்கள் பிள்ளைகளே

இது உங்கள் கதைகளே

தனனன்னத் ..........

பள்ளி செல்லும் காலம் - அது

பசுமையான காலம்

பாதை மாறிச் சென்று

அழிந்திடலாமோ நாம்?

தனனன்னத் .........

சிறுவர் உரிமைகள் - அது

எங்கள் உரிமைகள்

பள்ளி செல்லுவது - அது

உங்கள் கடமைகள்

தனனன்னத் .........


நிதி அனுசரணை :

Australian AID

Communities for Progress II

UNDP